கொரோனா
நேற்று 248
மொத்தம் 6,37,011
உயிரிழப்பு
நேற்று 05
மொத்தம் 16,450

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 119
வெள்ளிக்கிழமை
25 மார்ச் 2022
பங்குனி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16
விலை: 30/=

## அத்துமீறி மீன்பிடித்த 16 தமிழக மீனவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 25
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 16 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நெடுந்தீவுக் கடற்பரப்பு மற்றும் இரணைதீவுக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நெடுந்தீவுக்கு அருகே 15

## ஏதிலிகளாக வருவோரிடம் பணம் வசூலிக்க வேண்டாம்

### தமிழகப் படகு உரிமையாளர்களிடம் வேல்முருகன் கோரிக்கை

சென்னை, மார்ச் 25
தங்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றிக் கொள்ள தமிழகம் வரும் இலங்கைத் தமிழர்களிடம், பணம் வசூலிப்பதை தமிழகப் படகு உரிமையாளர்கள் 15

## வீடு உடைத்து திருட்டு!

### இருவர் கைது

புதுக்குடியிருப்புபொலிஸ் பிரிவுக்குட்பட்ட றெட்பானா பகுதியில் வீடு உடைத்து திருடினர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது 15

# கோத்தா அரசாங்கம் விரைவில் பெரும்பான்மையை இழக்கும்?

கொழும்பு, மார்ச் 25
தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவரப் பெரும் பங்காற்றிய பங்காளிக் கட்சிகள் தற்போது அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முழுவீச்சில் ஆரம்பித்துள்ளன. மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் விஞ்சிய ஆதரவைக் கொண்டிருந்த ராஜபக்ச அரசாங்கம் சாதாரண பெரும்பான்மைக்கே அல்லாடும் நிலைமை வெகு விரைவில் ஏற்படலாம் என்று கொழும்பு அரசியல் தகவல்களில் இருந்து அறிய முடிகின்றது. 15



## தந்தையின் கார் சில்லில் சிக்கி குழந்தை காயம்

சாவகச்சேரி, மார்ச் 25
தந்தை பின்னோக்கிச் செலுத்திய கார் சக்கரத்தில் சிக்கி ஒன்றரை வயது ஆண் 15

*முச்சந்தி முரளி*



"கொடுத்தவனே பறித்துக் கொண்டான்டி மானே வளர்த்தவனே வெறுத்து விட்டான்டி"

## வாழ்க்கைச் செலவு இன்னும் உயரும்!

### பெரமுன எம்.பி. கணிப்பு

கொழும்பு, மார்ச் 25
நாணய மாற்று வீதம் கட்டுப்பாடற்றதாக இருந்தால் மே, ஜூன் மாதத்துக்குள் அமெரிக்க டொலர் 400 ரூபாவைத் தாண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் நாடாளுமன்ற உறுப்பினர் குணபால ரத்னசேகர தெரிவித்துள்ளார். 15

## ரயில் கட்டண அதிகரிப்பு திடீரென இடைநிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 25
நேற்றுமுன்தினம் நள்ளிரவு அதிகரிக்கப்பட்ட ரயில் முன்பதிவு ஆசனக் கட்டணங்கள் முன்னறிவிப்பு இன்றி அதிகரிக்கப்பட்டதால் அந்தக் கட்டண அதிகரிப்பு உடனடி 12

## ஆலயத்துக்கு வந்தவர் மயங்கி வீழ்ந்து சாவு!

யாழ்., மார்ச் 25
திருநெல்வேலியில் உள்ள முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு வழிபாட்டுக்கு வந்த முதியவர் ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர் திடீரென மயங்கி வீழ்ந்ததை அடுத்து, அங்கிருந்தவர்கள் நோயாளர் காவு வண்டிக்கு அறிவித்துள்ளனர். 15

## 'வற்' வரி திருத்தச் சட்டம் நேற்று நிறைவேற்றம்!

கொழும்பு, மார்ச் 25
பெறுமதி சேர் வரி திருத்தச்சட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. 'வற்' எனப்படும் பெறுமதி சேர் வரி திருத்தச் 15

## யாழ். நகரப் பகுதியில் இளைஞனின் சடலம்!



யாழ்ப்பாணம், மார்ச் 25
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள உணவுக் களஞ்சியம் ஒன்றில் இளைஞர் ஒருவரின் உடல் தூக்கிட்ட நிலையில் நேற்று மாலை மீட்கப்பட் 15

## வெடிமருந்து கடத்தினாராம் பளையில் ஒருவர் கைது

கிளிநொச்சி, மார்ச் 25
வெடிமருந்து கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் பளை, இத்தாவில் பகுதியைச் சேர்ந்த ஒருவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி, பரந்தனைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், கைவிடப்பட்ட வெடிபொருள் 15

## போதை செய்த வேலை: கைதடியில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 25
மனைவியுடன் முரண்பட்டுக் கொண்டு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வந்து தீக்குளிக்க முயன்ற ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் 'கர்மா' சிங்களவர்களை வாட்டுகிறது

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 25**

**தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் கஞ்சிக்காக வரிசையில் நின்று அனுபவித்த கொடுமைகளை, கோத்தாபய, பிரதமர் தலைமையிலான அரசுகள் செய்த கர்மாவை இன்று சிங்கள மக்கள் அனுபவிக்கின்றனர் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று நாட்டில் எரிபொருள் இல்லை. எரிவாயு இல்லை. பால்மா இல்லை. மக்கள் வரிசைகளில் பல மணித்தியாலங்கள் காத்திருக்கும் நிலை. இவ்வாறான பொருளாதார நெருக்கடிகளை தமிழ்மக்கள் 20 வருடங்களுக்கு முன்பே அனுபவித்தனர். சிங்கள மக்கள் இப்போதுதான் முதன்முதலாக எதிர்கொள்கின்றனர், வரிசைகளில் நிற்கின்றனர், மரணித்து விழுகின்றனர். முள்ளிவாய்க்காலில் கஞ்சிக்காக வரிசையில் நின்ற குழந்தைகளையும், கர்ப்பிணிப்பெண்களையும் குண்டுகளை வீசிக் கொன்ற கோத்தாபயவினதும், மஹிந்தவினதும் 'கர்மா' தான் இன்று சிங்களவர்களையும் வரிசையில் நிற்க வைத்துள்ளது. அந்த கர்மவினையைத்தான் இன்று சிங்களவர்கள் அனுபவிக்கின்றனர்.

பிரபாகரன் காலத்தில் யாரும் பட்டினியால் இறக்கவில்லை. வரிசைகளில் நிற்கவில்லை. மரணித்தும் விழவில்லை. ஆனால் தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் அப்போதைய அரசும்தான் எமது மக்களை இனப்படுகொலை செய்தது. சிங்கள மக்கள் துன்பப்படுவதை, வேதனைப்படுவதை, தெருக்களில் இறப்பதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்காக நாம் அனுதாபப்படுகின்றோம்.

எறிகணைகளாலும், கொத்தணிக்குண்டுகளாலும் தமிழர்கள் கொல்லப்பட்ட போதெல்லாம், அதனை ஒருநாட்டின் விடுதலையாக தேசத்தின் விடுதலையாக, இனப்படுகொலையை மறைத்து செய்த இலங்கை அரசு இன்று அதன் விளைவுகளை அனுபவிக்கின்றது. இனங்களையும் அரவணைத்துச் செல்லும் ஒரு தலைவன் வராதவரை இதனைவிடவும் மோசமான நிலைகளை நாடு எதிர்கொள்ளநேரிடும். நாடு அதல பாதாளத்துக்குள் விழும். அதிகாரங்களைப் பகிர்ந்து சமஷ்டி அடிப்படையில் தீர்வை வழங்கக்கூடிய ஒரு சிங்கள தலைமகன் என்று வருகின்றானோ அன்றுதான் நாடு மீளும். அந்த சிங்களமகன் மாமனிதனாக மாறுவான். அவ்வாறான ஒரு சிங்கள மகனை உருவாக்க சிங்கள மக்கள் முன்வரவேண்டும் - என்றார். (ம-4-22)

### அரசியல் கைதிகள் விவகாரம்:
# தண்டனைக் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குக

குரலற்றவர்களின் குரல் அமைப்பு வலியுறுத்து



யாழ்ப்பாணம், மார்ச் 25

தமிழ் அரசியல் கைதிகளுக்கு அரசு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. ஜனாதிபதியுடனான சந்திப்பில்,தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கூட்டமைப்பு வலியுறுத்தவேண்டும் என்று தெரிவித்துள்ள குரலற்றவர்களின் குரல் அமைப்பு. இது தொடர்பில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

10 வருடங்கள் முதல் 26 ஆண்டுகளாக தமிழ் அரசியல் கைதிகள் 48 பேர் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் 67 வயதான தாயார். மேல் நீதிமன்றிலுள்ள 7 வழக்குகளில் 22 பேர் விளக்கமறியல் கைதிகளாக உள்ளனர். மேல்முறையீட்டு நீதிமன்ற வழக்குகளில் 65 வயதைக் கடந்த 3 பேர் உட்பட 14 பேர் மேல் முறையீட்டு தண்டனைக் கைதிகளாக உள்ளனர்.

நீண்டகால தடுப்புக் காவல், நீடிக்கும் விளக்கமறியல், தாய்மொழி அல்லாத சிங்களமொழியில் அச்சுறுத்திப் பெறப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலங்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டு ஒட்டுமொத்த சிறையிருப்பு காலத்தையும் தண்டனைக்காலமாகக் கருத்திலெடுத்து வழக்கு விசாரணைகள் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும்.

தண்டிக்கப்பட்ட தமிழ்க் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்குவதற்கு தயங்கப் போவதில்லை என ஜனாதிபதி, ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் நேரில் தெரிவித்திருந்தார். ஆனாபோதும் இரண்டு வருடங்கள் கடந்தும் வாக்குறுதி மெய்ப்படவில்லை.

10 முதல் 26 ஆண்டுகள் தொடராக சிறைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் பலர் எமது அன்புக்குரிய உறவுகள் சிலரையாவது போரில் பறிகொடுத்துவிட்டு வலிமிகுந்த போர் வடுக்களை சுமந்தவர்களாகவே உள்ளனர். 13 தமிழ் அரசியல்கைதிகள் சிறைக்குள்ளேயே பரிதாபமாக செத்து மடிந்துள்ளனர். தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் குடும்பங்கள் அன்றாடம் பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கீடுகளுக்கு ஆளாகி வருகின்றனர். அதுமட்டுமன்றி பிரிவுக்காலம் அகன்று செல்வதால் பல குடும்பங்களில் உறவுச்சிதைவு ஏற்படுகின்றது. அப்பாவி பிள்ளைகளின் எதிர்காலம் பாழாக்கப்படுகின்றது- என்றுள்ளது. (ம-4-7)



சாவகச்சேரியில் நீண்ட நாள்களுக்குப் பின்னர் நேற்று எரிவாயு சிலிண்டர் விநியோகிக்கப்பட்டதால், மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாவண்ணம் பொலிஸார் கடமையில் ஈடுபட்டனர். (ம-9,27,20)

# கடனுக்கான கைமாறு மீனவர்களின் கைதா?

## தமிழக மீனவர்கள் கண்டனம்

மன்னார், மார்ச் 25

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக இந்திய அரசிடம் கடன்பெற்றுள்ள இலங்கை அரசு, அதற்கு கைமாறாகத் தமிழக மீனவர்களைச் சிறைப்பிடித்துள்ளது என்று இராமேஸ்வரம் மீனவர்கள் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.



இராமேஸ்வரத்தில் நடத்திய அவசர ஆலோசனைக் கூட்டத்தில் இந்தக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இராமேஸ்வரம் மற்றும் மண்டபத்தைச் சேர்ந்த 16 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். இலங்கையில் தற்போது நிலவிவரும் கடும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து இலங்கையை மீட்பதற்காக இந்திய அரசு பல ஆயிரம் கோடி ரூபா நிதி அளித்துள்ளது. நிதியுதவியைப் பெற்றுக்கொண்ட இலங்கை அரசு அதற்கு கைமாறாக ஒரேஇரவில் 16 மீனவர்களைச் சிறைப்பிடித்துள்ளது. இதனைக் கண்டித்து இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

எதிர்வரும் சனிக்கிழமை இராமேஸ்வரம் மத்திய பேருந்து நிலையம் எதிரே மீனவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4-56)

# முன்னுரிமை அடிப்படையில் வியாபார நிலையங்களுக்கு சிலிண்டர்களை வழங்கவும்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 25

வியாபார நிலையங்களுக்கு, இருப்பிலுள்ள மூன்றிலொரு பகுதி எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை முகவர்களுக்கு அறிவுறுத்தியது.

அதிகார சபை உத்தியோகத்தர்களால், மாவட்ட இணைப்பதிகாரியின் தலைமையில் நேற்று திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பரிசோதனைகளை மேற்கொண்டவர்கள் எரிவாயு விநியோக நிறுவனங்களின் முகவர்களைச் சந்தித்தனர். இதன்போதே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து, இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-4-இ)

# ஒரு இலட்சம் காணிகளை வழங்குவதற்கு ஏற்பாடு

## மாவட்டச் செயலகத்தில் ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 25

ஒரு இலட்சம் காணித்துண்டுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மற்றும் இளம்தொழில் முயற்சியாளர்களுக்கு காணிகளைப் பிரித்து வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள், யாழ்ப்பாண மாவட்டக் காணிப்பயன்பாட்டுத்திட்டமிடல் குழுக்கூட்டத்தில் ஆராயப்பட்டன. மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் மாவட்டச் செயலகக் கேட்போர்கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதில் மாவட்ட காணிப் பயன்பாட்டு வலயமாக்கல் தயாரித்தல் செயற்றிட்டத்தின் பங்குதாரர்களின் கருத்துக்கள் பெறப்பட்டன.

காணிகளைக் குத்தகைக்கு வழங்குதல், மருதங்கேணி ஜே/428 பிரிவுக் குடியிருப்புத் தேவைக்கு அதன் சிறப்புக்களின் அடிப்படையில் காணிப்பயன்பாட்டு வலயமாக்கல் தொடர்பான விடயங்கள் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டன. கலந்துரையாடலில், மேலதிக செயலர் (காணி), மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், உதவி மாவட்டச் செயலர், பிரதேச செயலர்கள், காணித் திட்டமிடல் உத்தியோகத்தர்கள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-4-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பௌத்தத்தை விரிவுபடுத்தவா யாழ்ப்பாணம் வந்தார் பிரதமர்?

## கஜேந்திரன் எம்.பி. சபையில் கேள்வி

**கொழும்பு, மார்ச் 25**

**பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் யாழ்ப்பாணத்துக்கான பயணம் பௌத்த மதத்தை விரிவாக்கும் நோக்கிலேயே இடம்பெற்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வ ராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் நேற்றுமுன் தினம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் மிகமோசமான பொருளாதார நெருக்கடி உள்ள நிலையில் மக்கள் ஒருவேளைகூட சாப்பிட முடியாத நிலையில் இருக்கும் சூழலில்தான் பிரதமர் வடக்கு மாகாணத்துக்கு வந்தார். பிரதமரின் விஜயம் இனவாதத்தையும், மதவாதத்தையும் தூண்டுவதன் அடிப்படையிலேயே அமைந்திருந்தது.

பிரதமர் நயினாதீவுக்கும், நாவற்குழிக்கும் சென்றிருந்தார். கந்தரோடைக்குச் செல்வதற்கு முயற்சித்தார். தமிழர்களின் பூர்விக தாயகமாக இருக்கின்ற, சிங்கள மக்கள் வாழாத அந்தப் பிரதேசங்களில் பௌத்த மதத்தை விரிவாக்கும் நோக்கில்தான் பிரதமரின் விஜயம் அமைந்திருந்தது.

நயினாதீவுக்குச் சென்றவர் அங்குதான் பௌத்தத்தை விரிவாக்குவேன் என்று உறுதியளித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சொந்தக் காணி இல்லாமல் இருக்கின்ற நிலையில், வடக்கு மாகாணத்தோடு எந்தத் தொடர்புமற்ற கணிசமான ளவு சிங்களவர்களுக்கு நாவற்குழியில் காணிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த இடத்தில் சட்ட விரோதமான முறையில் விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

74 ஆண்டுகளாக இந்தத் தீவில் இனவாதத்தையும், மதவாதத்தையும் கக்கி ஆட்சிபீடமேறி தமிழர்களை அழித்தொழிப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்த மாறிமாறி ஆட்சிபீடமேறிய இந்த அரசுகள், இன்றும் அதே அணுகு முறையையே கையாளுகின்றன. தென்னிலங்கையில் தமது அரசியல் செல்வாக்குச் சரிந்துள்ள நிலையில், மக்கள் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பத் தயாராகியுள்ள நிலையில், சிங்கள மக்களை சாந்தப்படுத்துவதற்காக, ஏமாற்றுவதற்காக இந்த இனவாதத்தை, மதவாதத்தை பிரதமர் கையிலெடுத்திருப்பது கவலைக்குரியது.

மஹிந்த ஜனாதிபதியாக இருந்தபோது பல்லாயிரக்கணக்கானவர்கள் கடத்தப்பட்டு காணாமற்போயிருந்தனர். அவர்களின் உறவினர்கள் குறிப்பாக தாய்மார்கள் அவரது வருகையின்போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்கள் அந்த இடத்துக்குச் சென்றபோது பொலிஸார் அவர்களை பஸ்ஸிலிருந்து இறங்கவிடாது கதவுகளையும் கண்ணாடிகளை மூடி அடைத்து வைத்தனர். பொலிஸார் தாய்மார்களின் தலைமுடிகளைப்பிடித்து இழுத்து நிலத்தில் வீழ்த்தி கால்களால் உதைத்து பெரும் காடைத்தனம் புரிந்தனர்.

இந்த நாட்டின் சட்டங்கள் தமிழருக்கு எதிராக எவ்வளவு கொடூரமாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதை இவையெல்லாம் தெளிவாகக் காட்டுகின்றன. இதுதான் உங்கள் நாட்டின் ஜனநாயகம்- என்றார். (ம-4-22)

---

# தடுப்பிலிருந்து திரும்புவோருக்கு நலத்திட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

தடுப்பிலிருந்து திரும்பும் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று வலி.மேற்குப் பிரதேச சபையால் கொள்கை ரீதியாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வட்டார ரீதியாக சிறுவர் நலப் பாதுகாப்புத் திட்டங்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான திட்டங்களைப் போன்று, தடுப்பிலிருந்து மீள வருகை தந்தவர்களுக்கும் நலத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று உறுப்பினர் சிவகுரு பாலகிருஷ்ணனால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (ம-4-125)

---



# புத்தரிசி விழாவுக்கு அரிசி

முல்லைத்தீவு, மார்ச் 25

55ஆவது தேசிய புத்தரிசி விழாவுக்கு அரிசி வழங்கும் நிகழ்வு ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்ட கமலநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பரணீதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ஜெயராணி, மாவட்ட விவசாயப்பணிப்பாளர் கோகுலதாசன், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பண்ணை முகாமையாளர், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம-14,19)

---

# வலி.மேற்குப் பிரதேசசபையில் பயங்கரவாத சட்டத்தை நீக்க தீர்மானம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரி, வலிகாமம் மேற்குப் பிரதேச சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

குறித்த பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாதத் தடைச்சட்டம் மனித குலத்துக்கு எதிரான அநீதியாகும். தற்காலிகமாகக் கொண்டு வரப்பட்ட சட்டம் 42 ஆண்டுகளாக நீடித்து வருகின்றது.

சட்டத்தின் விதிகள் நமது நாட்டின் குற்றவியல் சட்டத்தின் அடிப்படை மூலாதாரங்களுக்கு முற்றிலும் எதிரானவை. ஒப்புதல் வாக்குமூலங்கள் தடுப்புக்காவல் மற்றும் பிணையில்லாது காவலில் வைத்தல் ஆகியவை சித்திரவதைகளை அதிகரிக்கும் ஆபத்தான விதிகளாகும். நீண்டகாலமாக உரிமைக்காகப் போராடும் தமிழினத்தைக் குறிவைத்து இந்தச் சட்டம் பாயவிடப்பட்டு வருகின்றது. இதன்மூலம் எண்ணற்ற தமிழ் இளைஞர்கள் எதிர் காலத்தை முற்றாக இழந்துள்ளனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசியல் பழிவாங்கல்களுக்காகப் பயன்படுத்துவது அடிப்படை மனித உரிமை மீறலாகும். எனவே இந்தச் சட்டத்தை முழுமையாக நீக்கவேண்டும்-என்றுள்ளது. (ம-4-125,27)

---




**சர்வகட்சி மாநாட்டில பஸில் ராஜபக்சவை கேள்வி கேட்டு ரணில் திக்குமுக்காடச் செய்தவரெல்லோ. இப்ப அதுதான் 'ரெண்டிங்'. அப்பிடி ரணில் கெத்துக் காட்டுறதுக்கு பின்னால இருந்தது சாட்சாத் சர்வதேச நாணய நிதியம் தான். இலங்கையில பொருளாதார நெருக்கடி வரப்போகுது எண்டு தெரிஞ்ச உடனேயே 'சர்வதேச நாணய நிதியத்திட்ட போங்கோ. நான் அதுக்கு ஏற்பாடு செய்யிறன்' எண்டு ரணில் சொன்னது உங்களுக்கு நினைவிருக்கலாம். அப்பிடி ரணில் தானாச் சொல்லேலை. நாணய நிதியம் தான் அப்பிடி ரணில் மூலமா இலங்கைக்கு தூண்டில் போட்டது. அந்தளவுக்கு ரணிலோட நெருக்கமான தொடர்பு சர்வதேச நிதியத்துக்கு.**

**ஆனால் கோத்தா அரசாங்கம், தாங்கள் நாணய நிதியத்தோட வைச்சிருக்கிற டீலை காதும் காதும் வைச்சமாதிரித்தான் நடத்தி முடிக்க இருந்தவை. ஏனெண்டால் முதல் 'நாங்கள் செத்தாலும் நாணய நிதியத்திட்ட போகமாட்டம்' எண்டு சொன்ன ஆக்கள் தானே அவை. அதால கொஞ்சம் அமத்தி வாசிக்கிறது நல்லது எண்டு பஸில்தான் ஐடியா குடுத்தவர். அதோட நாணய நிதியம் போடுற நிபந்தனைகள் வெளில கசிஞ்சால், பிறகு 'நாட்டை விக்கிறாங்கள்' எண்டு எல்லாப் பக்கமும் சனம் கத்தத் தொடங்கிடும் எண்டதாலையும் அந்த இந்த அமத்தி வாசிப்பு பிளான். ஆனால் இப்பிடியெல்லாம் உள்ளுக்கால அலுவல் நடக்குது எண்டது நாணய நிதியத்துக்கும் தெரியும். அதாலதான் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டச் சொல்லி, நாணய நிதியம் அரசாங்கத்தை இறுக்கிப் பிடிச்சது இவ்வளவுகாலமும் கூட்டாத சர்வகட்சி மாநாட்டை அரசாங்கம் திடீரெண்டு கூட்டினதுக்கு காரணம்.இந்தச் சர்வகட்சி மாநாடு தொடங்கமுதலே, 'நாணய நிதியம் இலங்கையின்ர பொருளாதாரத்தை மீட்க என்னென்ன திட்டம் போட்டிருக்கு? 'எண்ட வரைவு அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்ட விசயம் ரணிலுக்கும் தெரியும். அதாலதான் பஸில் அப்பிடியொரு வரைவு வரேலை எண்டு சொல்லச் சொல்ல, ரணில் விடாப்பிடியா நிண்டு கடைசியா பஸிலின்ர வாயாலையே 'ஓம்! ஆனால் ஒரு தற்காலிக வரைவுதான் வந்தது' எண்டு சொல்லவைச்சவர்.**

**மாநாட்டில பஸில், ரணிலின்ர ஆட்சியைக் கண்டபடி கரிச்சுக் கொட்ட, ரணிலுக்கு கோபம் வந்திட்டு. ஆனால் கோத்தாபாய தான் குறுக்க வந்து, ரணிலைச் சமாதானப் படுத்தினதோட, 'இப்பிடியெல்லாம் கதைக்கக் கூடாது' எண்டு பஸிலுக்கும் வாய்ப்பூட்டு போட்டவராம். ஏன் அவருக்கு ரணிலில அவ்வளவு அக்கறை? ஏனெண்டால், ரணில் சொன்னால் தான் நாணய நிதியம் கேக்கும். அதால பொன்முட்டை கிடைக்கிற வரைக்கும் வாத்துக்கு மதிப்புத்தானே.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அபிவிருத்தி என்ற போர்வையில் பெருமளவான காடுகள் அழிப்பு!

## சிரேஷ்ட விரிவுரையாளர் சுட்டிக்காட்டு

**மன்னார், மார்ச் 25**

**அபிவிருத்தி என்ற போர்வையில் காடுகள் அழிக்கப்படுகின்றன. இத னால் விலங்குகள் மனிதக் குடியிருப்புக்குள் படையெடுக்கின்றன என்று யாழ். பல்கலைக்கழக புவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாக முத்து பிரதீபராஜா தெரிவித்தார்.**

மன்னார் சமூக பொருளாதார மேம் பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட் டில் இடம்பெற்ற கலந்துரையாட லில், 'பூகோள மற்றும் பிராந்தி யங்களுக்கான காலநிலை மாற்ற மும், அதற்கான தீர்வுகளும்' என்ற தலைப்பில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-
காடுகள் மக்களின் வாழ்வில் மிக வும் முக்கியமான பங்கை வகிக்கின் றன. உலக நாடுகள் தங்கள் நிலப் பரப்பில் குறைந்தது 25 வீதமாகக் காடுகள் இருக்கவேண்டும் என்ற நியதியைக் கொண்டிருக்கின்றன. இலங்கையின் மொத்த நிலப் பரப்பை ஒப்பிடும்போது கனிசமான அளவு அதாவது சுமார் 28 வீத மாக காடுகள் இருப்பதைக் காட்டு கின்றன. வடக்கு மாகாணத்தில் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது 33 வீதமான இடங் கள் காடுகளாகக் காணப்படுகின் றன. இருந்தபோதும் பல்வேறு காரணங்களால் காடுகள் தற் பொழுது அழிக்கப்பட்டுவருகின்றன. திட்டமிடாத பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளின் காரணமாக இலங்கையில் காட்டுப்பகுதி கனிச மான அளவு குறுகிக்கொண்டு போகின்றது. சட்ட ரீதியான அல்லது சட்ட ரீதியற்ற செயற்பாட்டால் இயற் கைச் சூழல் அழியும் அதேவேளை யில், மனித வாழ்விடமான இடங்க ளில் வன விலங்குகள் அத்துமீறி உள்நுழைவதும் அதிகரித்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் கள் உட்பட நாட்டின் பல்வேறு இடங்களிலும் யானைகள் குடியி ருப்புப் பகுதிகளுக்கு வருகை தரு வதால் மனிதப் பாதுகாப்புக் கேள் விக்குறியாக மாறிவருகின்றது என் றார். (ம-4,60)



சேதனப்பசளை மூலம்

# பயிர்ச்செய்கையில் நல்ல விளைச்சல்!

முல்லைத்தீவு, மார்ச் 25
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள 64ஆவது படைப் பிரிவின் தலைமை வளாகத்தில் சேதனப்பசளை மூலம் மரக்கறிச் செய்கையை மேற்கொண்டு நல்ல விளைச்சல்களைப் பெற்றுள்ளோம் என்று படைப் பிரிவினர் விவசாயிகளுக்குத் தெரிவித்துள்ளனர்.
குறித்த பகுதியில் புடோல், பாகல், பயற்றை, முருங்கை ஆகிய மரக்கறி வகைகள் சேதனப் பசளை மூலம் படைப்பிரிவால் பயிரிடப்பட்டன. இதன் விளைச்சல்கள் பெருமளவாகக் காணப்பட்டன. அவற்றை ஒட்டுசுட்டான் விவசாய பயிற்சி நிலைய பண்ணை முகாமையாளர், கமநல சேவை நிலைய அதிகாரி, விவசாய விரிவாக்கற்பகுதி உத்தியோகத் தர்கள், விவசாயிகள் ஆகியோர் நேற்றுமுன்தினம் பார்வையிட்டனர்.
இதன்போதே சேதனப் பசளையைப் பயன்படுத்தி ஈடுபட்ட பயிர்ச்செய்கையில் நல்ல விளைச்சல்களைப் பெற்றுள்ளோம். இதனை விவசாயிகளும் மேற் கொண்டால் மரக்கறிப் பயிர்ச்செய்கையில் நல்ல விளைச்சல்களைப் பெறலாம் என்று விவசாயி களுக்குப் படைப்பிரிவினர் தெரிவித்தனர். (ம-14,19)

## புத்தாக்க அரங்க இயக்க உலக நாடக தின விழா!

யாழ்ப்பாணம், மார்ச் 25
புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் உலக நாடகதின விழா நாளைமறு தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
இதன்போது 'கொரோனாவுக்குப் பின் னரான சூழலில் நாடகச் செயற்பாடு கள்' என்ற கருப்பொருளில் கலந்துரை யாடலும் இளம் ஆற்றுகையாளர்கள் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளன.
அத்துடன் எஸ்.ரி.குமரன், எஸ்.ரி. அருள்குமரன் எழுத்துருவாக்கம் நெறி யாள்கையில் 'எம்மை நாமே காப் போம்', 'வாக்கு எங்கள் உரிமை', 'உணர்வுக்கு உயிர் கொடுப்போம்' ஆகிய ஆற்றுகை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.
புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப் பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் நாடக ஆர் வலர்களைக் கலந்துகொள்ளுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14)

## எகிறும் தங்கத்தின் விலை நகைத்தொழிலும் பாதிப்பு!

மன்னார், மார்ச் 25



தொடர்ச்சியாக தங்கத்தின் விலை அதிகரித்து வருவதால், நடுத்தர மற் றும் சிறு நகைக்கடை உரிமையாளர் கள் உள்ளடங்கலாக நகைத்தொழில கங்களில் பணிபுரியும் ஊழியர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இது தொடர்பில் துறைசார் அதிகாரிகள் தெரிவித்ததாவது:-
விலைவாசி அதிகரிப்பு, பொருள்களுக்கான தட்டுப்பாடு, வரு மானம் இன்மையால் மக்கள் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவதால், நகை களின் கொள்வனவு குறைவடைந்துள்ளது.
இந்த மாத ஆரம்பத்தில் இருந்து 24 கரட் தங்கம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் தொடக்கம் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா வரை யில் விற்கப்படுவதால் மக்கள் நகைகளைக் கொள்வனவு செய்வதைத் தவிர்த்துள்ளனர். இதனால் விற்பனை சடுதியாகக் குறைந்துள்ளது. (ம-4,56)



உள்ளூராட்சி சபை பெண்களுக்கான வில் கிளப் பின் ஐந்தாவது அமர்வும் கலந்துரையாடலும் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (ய-20)

# சிறுவர்களைக் கண்காணிக்கும் முழுப்பொறுப்பும் பெற்றோரிடம்

## புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வேண்டுகோள்

முல்லைத்தீவு, மார்ச் 25
பிள்ளைகள் மீது அக்கறை யுடனும், கண்காணிப்புட னும் பெற்றோர் இருத்தல் வேண்டும். இது அவர்களின் முழுப்பொறுப்பு என்று புதுக் குடியிருப்புப் பிரதேசபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.டி.ஆர்.கேரத் தெரிவித் துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்தா வது:-
புதுக்குடியிருப்புப் பிரதேசத் தில் பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பாவ னைக்கு அடிமையாகியுள்



ளமை பல்வேறு சம்பவங்க ளில் கண்டறியப்பட்டுள்ளன. இது தொடர்பான விழிப்பு ணர்வு பாடசாலைகள் தோறும் முன்னெடுக்கப்படுள் ளன. வணிக நிலையங்க ளில் 18 வயதுக்குக் குறை வானவர்களுக்கு புகைத்தல் மற்றும் போதைப்பொருளு டன் தொடர்புடைய எந்த பொருள்களையும் விற் பனை செய்யவேண்டாம்.
கடந்த 16 ஆம் திகதி மாலை நேர வகுப்புக்குச் சென்ற மாணவர்கள் சிலர் வெள் ளைவானில் கடத்தப்பட்டுள் ளனர் என்று வெளியான தகவல் உண்மைக்குப் புறம் பானது. மாணவர்கள் பெற் றோருக்குப் பொய்சொல்லி விட்டு புதுமாத்தளன் கடற்க ரைக்குச் சென்று அங்கு போதைப்பொருள் பாவனை யில் ஈடுபட்டுள்ளமை கண்ட றியப்பட்டுள்ளது. மாணவர் களைத் தவறான செயற்பாட் டுக்குக்கொண்டு செல்பவர் கள் தொடர்பில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டுள் ளனர்.
பெற்றோர் தமது பிள்ளை களில் அக்கறையாக இருக்க வேண்டும். அவர்களின் நடத்தைகளைக் கண்கா ணிக்க வேண்டும். இல்லா விடின் பிள்ளைகளின் எதிர் காலம் கேள்விக்குறியாகி விடும் - என்றார். (ம-4,19)

## அக்கராயன் மருத்துவமனைக்கு உளநல சிகிச்சை நிலையம்

கிளிநொச்சி, மார்ச் 25
கிளிநொச்சி அக்கராயன் மருத்துவ மனைக்கு உளநல சிகிச்சை நிலையம் நேற்றுமுன்தினம் வேள்ட் விசன் நிறு வனத்தால் கையளிக்கப்பட்டது.
வேள்ட் விசன் நிறுவனத்தின் ஒரு மில் லியன் நிதியில் குறித்த சிகிச்சை நிலை யம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. நிகழ்வில் கனடா நாட்டின் ஜே.எம். எவ்.ஓ.ஏ நிதியத்தின் தலைவர் மருத் துவர் எம்.மைலாசன், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சரவணப வன், உளநல மருத்துவர் ஜெயராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர். (ம-14,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக இளைஞர்களும் ஆயுதங்கள் ஏந்தக்கூடும்!

## வடிவேல் சுரேஷ் சபையில் கொந்தளிப்பு

**கொழும்பு, மார்ச் 25**

**மலையக இளைஞர்களும் எதிர்காலத்தில் ஆயுதங்கள் ஏந்தக்கூடும். அதற்கு அரசாங்கம் இடமளிக்கக் கூட்டாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மலையக மக்களின் காணிகளிலிருந்து அவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றும் பத்திரத்தை அரசாங்கம் அனுப்புகின்றது. 1989ஆம் ஆண்டுக்கு முன்னர் மலையகப் பெருந்தோட்டங்களில் வாழ்ந்த மக்களை, அவர்களின் காணிகள், வீடுகளில் இருந்து பலவந்தமாக வெளியேற்றும் அறிவிப்பு விடுக்க முடியாது. ஆனால் பலவந்தமாக வெளியேற்றும் பத்திரங்கள் அனுப்பப்பட்டுள்ளன. மலையக மக்கள் 6 பரம்பரைகளாக காணிகளைப் பதப்படுத்தி தேயிலை, இறப்பர் செய்கை செய்து, நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் சக்தியாக உள்ளனர். எமது மக்களை அந்தக் காணிகளில் இருந்து வெளியேறுமாறு அறிவித்து, அவர்களை வீதிக்கு இறக்கியுள்ளது அரசாங்கம். இதன் மூலம் மலையக இளைஞர்களையும் ஆயுதம் ஏந்த வைக்கவா அரசாங்கம் முயற்சிக்கின்றது? நாட்டைப் பாதுகாத்த மலையக மக்களை அரசாங்கம் இன்று துன்புறுத்தி வருகின்றது. அவர்களின் இருப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. மக்கள் வறுமையில் வாடிக் கொண்டிருக்கையில் அரசாங்கம் இவ்வாறு செய்வதற்கான காரணம் என்ன? பெருந்தோட்ட அமைச்சின் அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி வழங்கிவிட்டு, எதற்காக வெளியேறுமாறு தெரிவித்து அறிவிப்பு அனுப்புகிறீர்கள்? மலையக மக்களில் நல்லெண்ணம் கொண்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றும் பத்திரங்களை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் -என்றார்.

வலுக்கட்டாயமாக வெளியேற்றும் பத்திரங்களையும் அவர் சபையில் கிழித்தெறிந்தார். (ம-4-22)

# இந்திய கொலனியாக மாறும் திருகோணமலை

## இம்ரான் எம்.பி. எச்சரிக்கை



திருகோணமலை மாவட்டம் பகுதி பகுதியாக இந்தியாவுக்கு விற்கப்படுகின்றது. மெதுமெதுவாக இந்தியக் கொலனியாக மாற்றம் பெற்று வருகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் இலங்கை நாடாளுமன்றுக்குச் செல்வதா அல்லது இனிமேல் இந்திய நாடாளுமன்றுக்குச் செல்வதா என்ற குழப்பத்தில் உள்ளேன். காரணம் எமது மாவட்டம் இந்தியக் கொலனியாக மாற்றப்படுகின்றது. சீனக்குடாப் பகுதியில் உள்ள எண்ணெய் தாங்கிகளும், நிலங்களும் விற்கப்பட்டுவிட்டன. தற்போது சம்பூரை விற்கவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகின்றது.

இந்த ஒப்பந்தம் மூலம் பொதுமக்களின் குடியிருப்புக் காணிகள், விவசாயக் காணிகள் உள்ளிட்ட பெருந்தொகையான காணிகள் கைப்பற்றப்படலாம் என்ற அச்சம் அப்பகுதி மக்களிடத்தில் நிலவுகின்றது.

ஆகவே இந்த ஒப்பந்தம் சம்பந்தமான முழுமையான தகவல்களையும் இந்தச் சபையில் சமர்ப்பிக்கவேண்டும்.

கைப்பற்றப்படவுள்ள பொதுமக்களின் காணிகளுக்கான மாற்றுத் தீர்வை அமைச்சர் சபைக்குத் தெளிவுபடுத்தவேண்டும்.

திருகோணமலையில் உள்ள இயற்கைத் துறைமுகம், எண்ணெய் தாங்கிகள், இல்மனைட் தொழிற்சாலை, கந்தளாய் சீனித் தொழிற்சாலை ஆகியவற்றை சிறந்த முறையில் நிர்வகித்தாலே எமது நாட்டுக்குப் போதிய வருமானத்தைப் பெறலாம். எமது நாட்டை அபிவிருத்தி அடையச் செய்யலாம். ஆனால் அரசாங்கமோ இந்த வளங்களை இந்தியாவுக்கு விற்பதையே நோக்காகக் கொண்டுள்ளது -என்றார், (ம-4-இ)

# 30 வருடங்கள் போரால் அழியாத நாடு இரண்டு வருடங்கள் ஆட்சியால் அழிவு

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 25

30 வருட போரால் அழியாத நாடு, கோத்தாபயவின் இரண்டு வருட ஆட்சியால் அழிந்துவிட்டது என்று தெரிவித்தார் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் சிங்கள மக்களுக்குக் காணிகள் உள்ளன. வடக்கு-கிழக்கு மக்களுக்குக் காணிகள் உள்ளன. முஸ்லிம்களுக்கும் காணிகள் உள்ளன. ஆனால் மலையக மக்களைப் பொறுத்தவரை எமது மக்களுக்குக் காணி என்பது ஓர் எட்டாக் கனியாகவே உள்ளது. எமது மக்களுக்கு ஏழு பேர்ச் காணி கிடைக்க வேண்டும் என போராட்டம் நடத்திய போதெல்லாம் எல்லா அரசாங்கங்களும் எமது மக்களுக்குக் காணி கொடுப்போம் என்ற வாக்குறுதிகளை வழங்கின. ஆனால், இதுவரையிலும் அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

சந்திரிக்கா பண்டாரநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவான பின்னர் சந்திரசேகரன் மூலமாக மலையகத்தில் முப்பதாயிரம் வீடுகளுக்குக் காணி உரிமங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. அதற்குப் பின்னர் நல்லாட்சி அரசாங்கத்தில் ஏழு பேர்ச் காணிகள் கொடுக்கப்பட்டு காணி உரிமைப் பத்திரங்களும் வழங்கப்பட்டன. ஆனால் இன்று நிலைமை மீண்டும் மாறியுள்ளது. காணியும் இல்லை. வீடும் இல்லை.

பெருந்தோட்டத்தில் வாழ்கின்ற தோட்ட சேவையாளர்கள் ஓய்வின் பின்னர் அவர்களுக்கு வாழ்வதற்கு வீடு இல்லை. கடைகளில் பணியாற்றும் சிப்பந்திகளுக்கு வீடுகள் இல்லை. அவர்கள் வீதிகளில் நிற்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கொழும்பு மக்களுக்குக் காணி உரிமம் வழங்கப்படும் என்று பிரதமர் கூறினார். அதனை நாம் வரவேற்கின்றோம். அதேபோல் மலையகத்தில் மக்களுக்கு வாக்குரிமை இல்லாத காலத்திலும், காணிகள் இல்லை. இன்று வாக்குரிமை இருந்தும் காணிகள் இல்லை என்பதையும் அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

மாகாண சபைகளை முதலில் அமைத்து அதன் மூலமாக காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றோம். ஒரு லட்சம் பேருக்குக் காணி உரிமம் வழங்கும் நடவடிக்கையை ஜனாதிபதி எடுத்தார். இதில் மலையகத் தமிழ் மக்களையும் உள்வாங்கிக்கொள்ள வேண்டும் -என்றார். (ம-4-22)

# இந்தியப் பிரதமர் மோடிக்கு மஹிந்த நன்றி தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்திய அரசாங்கம் வழங்கிய ஆதரவுக்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ச நன்றி தெரிவித்துள்ளார்.

பிரதமரின் ஊடகப்பிரிவால் அனுப்பப்பட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். எதிர்காலத்திலும் இந்திய அரசாங்கம், இலங்கையின் விவகாரங்கள் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் விசேட கவனம் செலுத்தும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-14)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பதற்கான பேரணியும் விழிப்புணர்வும்




யாழ்ப்பாணம், மார்ச் 25

'அனைவருக்கும் அழகான பயணம்' என்ற தொனிப் பொருளில், பொதுப் போக்குவரத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான பேரணியும் விழிப்புணர்வும் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலைய[illegible] முன்னெடுக்கப்பட்டது.


மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் தேசிய பெண்கள் குழு, யாழ். மாவட்ட செயலகத்துடன் இணைந்து முன்னெடுத்த இந்த நிகழ்வுகளுக்கு யாழ். மாவட்ட செயலர் க.மகேசன் தலைமை வகித்தார்.

முன்னாள் யாழ். மாவட்ட செயலரும், முன்னாள் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளரும், தற்போதைய தேசிய பெண்கள் குழு உறுப்பினருமான இமெல்டா சுகுமார், மேலதிக மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன், மற்றும் மாவட்டச் செயலக பெண்கள் அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ய-125-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி

## 21.3.2022 முதல் 8.10.2023 வரை



**ராகு-கேது பெயர்ச்சி. வாக்கிய பஞ்சாங்கத்தின்படி எதிர்வரும் 21ஆம் திகதி பிற்பகல் 3.02 மணிக்கு பெயர்ச்சி ஆகிறார். இதில் ராகு ரிஷபத்தில் இருக்கும் கார்த்திகை 2ஆம் பாதத்திலிருந்து மேடராசியில் இருக்கும் கார்த்திகை 1ஆம் பாதத்துக்கும், கேது விருச்சிகத்தில் இருக்கும் விசாகம் 4ஆம் பாதத்திலிருந்து, ஜென்ம ராசியான துலாம்ராசி விசாக நட்சத்திரம் 3ஆம் பாதத்துக்கும் பெயர்ச்சியாக உள்ளார். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி பிற்பகல் 1.38 மணியளவில் ராகு - கேது பெயர்ச்சி நிகழ்கிறது.**

தியாக உணர்வும், திடசிந்தனையும் உள்ள கன்னி ராசியினரே...! அதேபோல், பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்டும் அன்பர் நீங்கள். உங்களுக்கு 21.03.2022 முதல் 08.10.2023 வரையிலும் ராகுவும் கேதுவும் இணைந்து என்னென்ன பலன்களைத் தரப்போகிறார்கள் என்று பார்ப்போம்.

இதுவரையிலும் உங்கள் ராசிக்கு ஒன்பதாம் வீட்டில் அமர்ந்து, வருமானத்துக்கு வழியே இல்லாமல் தடுமாற வைத்தார் ராகு பகவான். இப்போது அவர் எட்டாம் வீட்டில் சென்று மறைகிறார். ஆகவே சிரமங்கள் மறைந்து ஓரளவு மனநிம்மதி பெறுவீர்கள். சிலரின் ஆலோசனையைக் கேட்டு தவறான பாதையில் சென்று பலவிதங்களிலும் சிக்கித் தவித்தவர்கள், இனி நேர்ப்பாதையில் பயணிக்க முடிவெடுப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பாதியிலேயே தடைப்பட்டுப்போன வேலைகளையெல்லாம் பரபரப்புடன் முடித்துக்காட்டுவீர்கள்.

வீட்டில் தள்ளிப் போய்க் கொண்டிருந்த சுபநிகழ்ச்சிகள் இனி சிறப்பாக நடக்கும். தந்தையின் மருத்துவச் செலவுகள் குறையும். அவரின் ஆரோக்கியம் மேம்படும். அப்பா-மகன் உறவு இனிக்கும். தந்தை வழிச் சொத்தில் சிக்கல்கள் நீங்கும். அதேநேரம் எதிர்பாராத செலவுகளும் பயணங்களும் உண்டு.

குடும்பத்தில் கொஞ்சம் விட்டுக்கொடுத்துப் போகவேண்டும். கணவன்-மனைவிக்குள் சின்ன சின்ன கருத்து மோதல் களும் பெரிய பிரச்சினையாக மாற வாய்ப்பு உண்டு.

**21.03.2022 முதல் 22.05.2022 வரை:** சூரியனின் கார்த்திகை நட்சத்திரம் 1ஆம் பாதத்தில் ராகு செல்வதால் அவசர முடிவுகளைத் தவிர்க்கப்பாருங்கள். பணப்பற்றாக்குறை, காரியத்தடை, வழக்கில் பின்னடைவு, விரயச் செலவுகள் வரும்.

**23.05.2022 முதல் 29.01.2023 வரை:** சுக்ரனின் பரணி நட்சத்திரத்தில் ராகு செல்வதால், எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தடைப்பட்ட வேலைகள் உடனே முடியும். மகனுக்குத் திருமணமும், மகளுக்கு நல்ல வேலையும் கிடைக்கும். தாயாரின் உடல்நலன் சீராகும்.

**30.01.2023 முதல் 8.10.2023 வரை:** கேதுவின் அச்சுவினி நட்சத்திரத்தில் ராகு செல்வதால் மனஉளைச்சல், விரக்தி, சோர்வு, வாகன விபத்து வந்து நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் விட்டுக்கொடுத்துப் போகவும்.




**வியாபாரத்தில்:** மற்றவர் பேச்சைக் கேட்டு பெரிய திட்டங்களில் இறங்கவேண்டாம். கொஞ்சம் போராடித்தான் வசூலிக்க நேரிடும். முன்னேற்றம் உண்டு. வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பேசுங்கள்.

**உத்தியோகத்தில்:** தொல்லை தந்த மேலதிகாரியே இனி உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார். அவரின் சொந்த விடயங்களில் தலையிடும் அளவுக்கு நெருக்கமாவீர்கள். இழந்த சலுகையை மீண்டும் பெறுவீர்கள். கணினித் துறையினருக்குப் புதிய வாய்ப்புகள் தேடிவரும். கலைத் துறையினரின் படைப்புகளுக்குப் பரிசும், பணமுடிச்சும் உண்டு.

இதுவரையிலும் உங்கள் ராசிக்கு 3ஆவது வீட்டில் அமர்ந்துகொண்டு மனத் தைரியத்தையும், தன்னம்பிக்கையையும், விடாமுயற்சியையும் கொடுத்து வந்தார் கேது பகவான். இரண்டாவது வீட்டில் நுழைகிறார். சாதுரியமான பேச்சால் சாதிப்பீர்கள். ஆனால் சில நேரங்களில் அந்தப் பேச்சாலேயே பிரச்சினைகளிலும், வீண்வம்புகளிலும் சிக்கிக் கொள்வீர்கள். வெளியிடங்களில் முடிந்தவரை வெளிப்படையாகப் பேசுவதைத் தவிர்த்துவிடுங்கள். சிலருக்குப் பல்வலி, பார்வைக் கோளாறு வந்து நீங்கும். சேமிப்புகள் கரையும் அளவுக்கு அத்தியாவசியச் செலவுகள் அதிகமாகும். என்றாலும் இடையிடையே பண வரவு, யோக பலன்களும் உண்டாகும். வார்த்தையில் சிக்கல்கள் நீங்கி திருமணத்தைச் சிறப்பாக நடத்துவீர்கள். அயல்நாட்டுப் பயணங்கள் தேடி வரும். தூக்கமின்மை, மனஉளைச்சல் வந்துபோகும்.

**21.03.2022 முதல் 24.09.2022 வரை:** குருவின் விசாகம் நட்சத்திரத்தில் கேது செல்வதால் பணவரவு, வாகனவசதி, பெரிய மனிதர்களின் நட்புக் கிடைக்கும்.

**25.09.2022 முதல் 04.06.2023 வரை:** ராகுவின் சுவாதி நட்சத்திரத்தில் கேது செல்வதால் பழைய நண்பர்கள், உறவினர்களுடன் கருத்து மோதல்கள் வந்து போகும். குடும்ப ரகசியங்களை வெளியிட வேண்டாம். உடல்நலனில் கவனம் செலுத்துங்கள். கனவுத்தொல்லை, தூக்கமின்மை வந்துபோகும்.

**04.06.2023 முதல் 08.10.2023 வரை:** செவ்வாயின் சித்திரை நட்சத்திரத்தில் கேது செல்வதால் விலையுயர்ந்த ஆடை, ஆபரணங்கள் சேரும். சொத்து தகராறுகள் சுமுகமாக முடியும். அரசுக் காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். கவனம் தேவை. வேலைச்சுமை அதிகரிக்கும். மேலதிகாரி நெருக்கமாக இருந்தாலும், உடன்பணிபுரிபவர்கள், உங்களைக் குறைகூறவே செய்வார்கள்.

## நாவடக்கம் அமைதியின் பிறப்பிடம்

பேச்சில் நிதானம் தவறாதோர் நிறைவு பெற்றவராவார். அவர்களே தம் முழு உடலையும் கட்டுப்படுத்த வல்லவர்கள். குதிரைகளை அடக்க கடிவாளம் இடுகின்றோம். மாபெரும் கப்பல்களாக இருந்தாலும் சிறியதொரு சுக்கானைக்கொண்டு விரும்பும் திசையை நோக்கி செலுத்த முடிகிறது. மனித நாவும் அதைப்போல சிறிய உறுப்புத்தான். ஆனால் பெரிய காரியங்களைச் சாதிப்பதாக அது பெருமையடிக்கிறது.

சிறியதொரு தீப்பொறி எவ்வளவு பெரிய காட்டையும் அழித்து விடுகிறது.

எமது நாவும் தீயைப் போன்றதுதான். நெறிகெட்ட உலகின் உருவே அது. அதிலிருந்து புறப்படும் தப்பான வார்த்தைகள் எம்மையும் பிறரையும் எரித்துவிடுகின்றன. உலக படைப்புக்களை அடக்கி ஆழும் மனிதனால் தனது நாவை மட்டும் அடக்கிப் பேச முடிவதில்லை.

கடவுளைப் போற்றுவதும் எமது நாவே. கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதரைத் தூற்றுவதும் அந்த நாவே. தூற்றலும் போற்றலும் ஒரே வாயிலிருந்து வருகின்றன. உதிர்த்த வார்த்தைகள் மீண்டும் எமது வாய்க்குள் திரும்பாது.

எனவே நாம் எதையும் பேசும்போது நின்று நிதானித்து பிறரை துன்புறுத்தாத விமர்சிக்காத வகையில் இருக்கவேண்டும். சுயகட்டுப்பாட்டுடன் பிறரின் கௌரவத்தையும் நின்மதியையும் அபிப்பிராயத்தையும் குலைத்துவிடாது பேச முயல்வோம். உண்மையை நீதியை ஆய்ந்தறிந்து வார்த்தைகளைப் பிரயோகிப்போம். நாவடக்கம் அமைதியின் பிறப்பிடம்.

**எஸ்.யேசுதாஸ்,**
கொழும்புத்துறை

# 12 நெல் உலரவிடும் தளங்கள் விரைவில் அமைக்க ஏற்பாடு

மன்னார், மார்ச் 25

மன்னார் மாவட்டத்தில் மேலும் 12 நெல் உலர்த்தும் தளங்கள் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்று மாவட்ட கமநல உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.



மாவட்டத்தில் நெல் உலர்த்தும் தளங்கள் இல்லாமையால், அறுவடை செய்யும் நெல்லை விவசாயிகள் வீதிகளில் காயவிடுகின்றனர். இதனால் போக்குவரத்தில் இடையூறும் ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஆணையாளர் தெரிவிக்கையில்;

2010 ஆம் ஆண்டுக்கு முதல் நெல் அடிக்கும் தளங்களாக பாவனையிலிருந்து தளங்கள் நெல் உலர்த்தும் தளங்களாக மாற்றப்பட்டு அதற்குரிய வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

2012ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து இன்று வரை மன்னார் மாவட்டத்தில் மாகாண விவசாயத் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் மாவட்டச் செயலகத்தின் நிதியுதவியுடன் கிட்டத்தட்ட 44 தளங்கள் நிர்மாணிக்கப்பட்டு, விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் மேலதிக நெல் உலர்த்தும் தளங்களுக்கான தேவைகள் உணரப்பட்டுள்ளன.

இந்த வருடம் மாவட்டச் செயலகத்தால் கிட்டத்தட்ட 12 தளங்களுக்காக 22 மில்லியன் ரூபா கிடைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கமநல சேவை நிலையங்களில் கமநல அபிவிருத்திச் சபையின் ஊடாக, கமநல விவசாய அமைப்புக்கள் முன்னுரிமையில் தளங்களை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன -என்றார். (ஓ-4-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல்கண்டும்....

அனைத்துக் கட்சிகளின் மாநாடு என்பது அரசியல் ஆதாயம் தேடுவதற்கான முயற்சியே என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டை நிராகரித்துள்ள ஜனாதிபதி, 'இனிவரும் காலங்களில் நடைபெறவுள்ள அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் கலந்துகொள்ள வேண்டும். நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான யோசனைகளை எதிர்க்கட்சிகள் முன்வைத்தால் அவற்றைச் செவிமடுக்கத் தயாராகவே இருக்கின்றேன்' என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை இன்று மீண்டெழ முடியாத அளவுக்கு இவ்வளவு பெரிய பொருளாதாரப் பின்னடைவில் சிக்கியிருக்கின்றது என்றால் அதற்கு ஜனாதிபதி கோத்தாபயவின் மமதையும் மெத்தனப்போக்கும்தான் முதன்மைக் காரணங்கள். அரசாங்கம் கடந்த ஆறு மாதத்துக்குள் முன்னெடுத்த நகர்வுகள் ஒவ்வொன்றுக்கும் எதிர்க்கட்சிகள் தமது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தவே செய்தன. அரசியல்- தேர்தல் - வாக்குகள் என்பனவற்றுக்கு அப்பால் நாட்டின் நலன் சார்ந்ததாக அந்த அறிவுறுத்தல்கள் - ஆலோசனைகள் - எச்சரிக்கைகள் அமைந்திருந்தன என்பதை திறந்த மனதுடன் ஏற்கத்தான் வேண்டும். ஆனால், கோத்தாபய தலைமையிலான அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் எச்சரிக்கைகளையும் 'எப்போதும்போல' தட்டிக்கழித்ததோடு பரிகசிக்கவும் செய்ததே தவிர அவற்றைக் கிஞ்சித்தும் செவிமடுக்கவில்லை.

டொலரின் இருப்பைத் தக்கவைக்கவும் புதிய வழிமுறைகளைக் கண்டறியவும் எதிர்க்கட்சிகளும் பொருளாதார நிபுணர்களும் எத்தனையோ பரிந்துரைகளை முன்வைத்தனர். ஆனால், அரசாங்கம் எதைத்தான் கேட்டது? இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தினால் டொலர் வெளியே செல்லாது என்பதுதான் அரசாங்கம் இந்த விடயத்தில் முன்னெடுத்த ஆகப்பெரும் வியூகமாக இருந்தது. 'பணத்தை அச்சடிக்க வேண்டாம். அவ்வாறு பணத்தை அளவுக்கதிகமாக அச்சிட்டால் பணவீக்கம் ஏற்படும், பொருள்களின் விலைகள் உயரும், பணச் சுழற்சி இல்லாமற்போகும்' என்றும்கூட எதிர்க்கட்சிகள் எச்சரித்தன. ஆனால் அரசாங்கம் என்ன செய்தது? காகிதக் குப்பைகளாக பல பில்லியன் ரூபாவை அச்சடித்துக் குவித்துள்ளது.

இலங்கை இனி மீட்சி பெற வேண்டுமாயின் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் என்று ரணில் தரப்பினர் எப்போதோ அறிவுறுத்தினர். ஆனால், வெள்ளம் தலைக்கேறிய பின்னர்தான் அது தொடர்பில் அரசாங்கம் பரிசீலிக்கவே செய்தது. இறுதியில் இப்போது சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைந்துள்ளது. இதை ரணில் தரப்பு பரிந்துரைத்தபோதே செயற்படுத்தியிருந்தால் இன்று இந்தப் பொருளாதாரப் பேரழிவை ஓரளவாவது தவிர்த்திருக்கலாம்.


அதேநேரம் அரசாங்கத்தின் இந்த மெத்தனப்போக்கும் தான் தோன்றித்தனமும், அனைத்துக் கட்சி மாநாட்டுடன் முடிந்துவிடப் போகின்றதா? என்று கேட்டால், விவாதங்கள் ஏதுமின்றி 'இல்லை' என்று அழுத்தம் திருத்தமாகப் பதில் வழங்கிவிட முடியும். மேற்கொண்டு பணத்தை அச்சிட வேண்டாம் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். ஆனால், புத்தாண்டுக்கு முன்னதாக அறிவிக்கப்படலாம் என்று கருதப்படும் அரசாங்கத்தின் நிவாரணப் பொதி 'புதிய காகிதக் குப்பையை' தோற்றுவிக்கும் முனைப்பாக இருக்கலாம் என்ற சந்தேகம்தான் இப்போது வலுவாக எழுகின்றது. இப்படியான நிலையில் எவ்வாறு பொருளாதாரம் மீண்டெழும்?

'எதிர்க்கட்சிகளின் கருத்தை செவிமடுக்கத் தயாராக இருக்கின்றேன்' என்று ஜனாதிபதி சொல்வது உண்மையாக இருந்தால், ஆத்மார்த்தமாக அவர் தன் கருத்தை வெளிப்படுத்தியிருந்தால் இப்போதாவது சுயநலஅரசியலுக்கு-வாக்கு வங்கிகளுக்கு -தன்முனைப்புகளுக்கு (ஈகோ) அப்பால் எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளுக்கும் நிபுணர்களின் பரிந்துரைகளுக்கும் செயல்வடிவம் கொடுக்க அவர் முன்வர வேண்டும். இன்றோ,நாளையோ என்று சேடம் இழுத்துக்கொண்டிருக்கும் இலங்கையின் இதயம் மீண்டும் துடிப்பதற்கான தொடக்கப்புள்ளியாக அது அமையும். ஆனால் அதற்கான வாய்ப்புகள் அறவே இல்லையென்பதைத்தான் இலங்கையின் வரலாறு கற்பிக்கின்றது.

சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும், சிந்தை இரங்காரடி கிளியே செம்மை மறந்தாரடி என்ற வரியைப் பாரதி பாடும்போது அநேகமாக இப்போதைய [illegible]மியம் நலிந்த 'சிங்களத் தீவு'தான் அவர் மனக்கண்ணில் நின்றிருக்கவேண்டும்.

## நாளொரு நல்வார்த்தை

"ஒரு செயலைச் சிறப்பாக செய்வதற்கு சிறந்த வழி, அதனை தேடிக்கண்டறிவதே." - தோமஸ் ஆல்வா எடிசன்




வவுனியா மாவட்டத்தில்

# இரண்டு வருடங்களில் 100பேருக்கு காசநோய்

## 15 பேர் உயிரிழப்பு

**வவுனியா, மார்ச் 25**

**வவுனியா மாவட்டத்தில் கடந்த இரண்டு வருடங்களில் காசநோயால் 100 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 15 பேர் உயிரிழந்துள்ளனர் என்று மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு மருத்துவ அதிகாரி கே.சந்திரகுமார் தெரிவித்தார்.**

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காசநோய் இருமல் மூலம் மற்றவருக்கு தொற்றக் கூடியது. இதுவும், கொரானாவும் ஒரே மாதிரியாகவே பரவுகின்றன. இதனை சில அறிகுறிகள் மூலம் கண்டுபிடிக்க முடியும். குறிப்பாக ஒருவருக்கு தொடர்ச்சியாக இருமல் இருப்பின், அது காச நோயாக இருப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளது. சளியைச் சோதிப்பதன் மூலாக நோயை அறியமுடியும். வவுனியாவில் அனைத்து அரச மருத்துவமனைகளிலும் பரிசோதனை செய்வதற்கான வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உடனடியாக பரிசோதித்து நோயைக் கண்டுபிடித்து அதற்குரிய சிகிச்சைபெற வேண்டும். வவுனியா மாவட்டத்தில் 2021ஆம் ஆண்டு 52 பேரும், 2020ஆம் ஆண்டு 47 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர். 2021ஆம் ஆண்டு 8 பேரும், 2020ஆம் ஆண்டு 7 பேரும் மரணமாகியுள்ளனர். காலம் தாழ்த்தி சிகிச்சை பெற்றுக்கொண்டமையே இறப்புக்கு முக்கிய காரணமாகும்.

2035ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து காசநோயை முற்றாக இல்லாமல் ஒழிக்க வேண்டும் என்ற வகையில் எங்களது செயற்பாட்டை முன்னெடுக்கின்றோம். மக்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார்.

(ம-4,110)

# காசநோய் தினத்தில் விழிப்புணர்வுப் பேரணி

வவுனியா, மார்ச் 25

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் நேற்று விழிப்புணர்வுப் பேரணி இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட மருத்துவமனை காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி இடம்பெற்றது.

"காசநோயை முடிவுக்குக் கொண்டுவர முதலிடுவோம், உயிர்களைக் காப்பாற்றுவோம்" எனும் தொனிப்பொருளில் பேரணி இடம்பெற்றது.



காசநோய்க் கட்டுப்பாட்டு பிரிவில் ஆரம்பமான பேரணி, வவுனியா மணிக்கூட்டுக் கோபுரம் ஊடாக பஜார் வீதியை அடைந்து மீண்டும் மருத்துவமனையை வந்தடைந்தது.

(ம-4,110)

நாளை
26.03.2022
சனிக்கிழமை
பங்குனி 12

சுபநேரம் : 03.15 - 04.45
ராகுகாலம்: 09.15 - 10.45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்து முன்னேறுவீர்கள். கையில் பணம் புரளும். புதிய வேலையில் சேருவீர்கள். குடும்பத்தினருடன் நல்லுறவு மலரும். பயணம் ஏற்பாடாகும்.

**இடபம்:** புதிய பொறுப்புக்கள், சலுகைகள் கிடைக்கும் நாள். தந்தையிடம் இருந்து உதவிகள் கிடைக்கும். பரபரப்பான நாள். அலுவலகத்தில் நெருக்கடி நீங்கி நிம்மதி பிறக்கும்.

**மிதுனம்:** தொழில் சீராக இருக்கும். முயற்சியில் வெற்றி உண்டு. சுய தொழில் தொடங்குவீர்கள். வெளிநாட்டுப் பணம் வரும். மேலதிகாரியுடன் இருந்த மோதல் முடிவுக்கு வரும்.

**கடகம்:** எதிர்த்தவர்கள் விலகுவர். தாயார் மீது அக்கறை தேவை. கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்த நண்பர்கள் இணைவர். பிள்ளைகளின் செயற்பாடுகளில் முன்னேற்றம் வரும்.

**சிம்மம்:** வியாபாரத்தில் லாபம் வரும். உடன்பிறப்புகள் உதவி செய்வர். பிரிந்த நண்பர்கள் இன்று இணைவர். குழப்பம் நீங்கி தெளிவடைவீர்கள். வியாபாரத்தில் ஆர்வம் கூடும். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி:** குடும்பத்தினர் உங்கள் மீது பாசம் காட்டுவர். நன்மைகள் கூடும். அரசாங்க விஷயம் அனுகூலமாக முடியும். நிம்மதி கிடைக்கும் பெற்றோர் உங்களைப் புரிந்து செயற்படுவர்.

**துலாம்:** கலகலப்பு அதிகரிக்கும். குழந்தைகள் உங்களை பெருமிதப்படுத்துவர். பணியாளர்களுக்கு திருப்திகரமான நாள். மகிழ்ச்சி கூடும். பேசும்போது வார்த்தைகளைக் கவனமாகக் கையாள்வது நல்லது.

**விருச்சிகம்:** பலநாள் காத்திருந்த விஷயம் இன்று நல்ல முடிவுக்கு வரும். உங்களின் பேச்சும், செயலும் நேர்மையாக இருக்கும். மகிழ்ச்சி கூடும். தேவையற்ற கற்பனையால் மனக்கலக்கம், பயம் ஏற்படும்.

**தனுசு:** வெளியிடங்களில் புதிய மனிதர்களிடம் கவனமாக இருக்கவும். இன்றுசெய்யும்பணியில்கவனத்துடன் செயற்படவும். பொருள்களை கவனமாகப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

**மகரம்:** குழந்தைப் பாக்கியம் எதிர்பார்ப்பவர்களுக்கு நற்செய்தி கிடைக்கும். தேவையற்ற சிறியதொரு மனக்கவலை வந்து போகும். நிதானமான செயலால் வரவு அதிகரிக்கும்.

**கும்பம்:** நீங்கள் நினைத்த விஷயம் தடைக்குப்பின் இனிதே நடந்தேறும். உங்களின் வாக்குவன்மையால் பொருளாதாரநிலை மேம்படும். தாராளமாகச் செலவு செய்து சந்தோஷப்படுவீர்கள்.

**மீனம்:** பிறரிடம் பேசும்போது நிதானத்தை கையாள்வது நல்லது. செலவுகளால் நன்மையும் மகிழ்ச்சியும் கிடைக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை. நிதிநிலை சீராகும் நாள்.

## நட்புறவில் அல்லாத நாடுகளுக்கு

# ரூபிளுக்கு மட்டுமே எரிவாயு வழங்கப்படும்

## பொருளாதாரத் தடைக்கு எதிராக புடின் அதிரடி

**மொஸ்கோ, மார்ச் 25**

**ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் தமது எரிவாயுத் தேவைக்கு ரஷ்யாவை அதிகம் சார்ந்துள்ள நிலையில், ரஷ்யாவுடன் நட்புறவில் அல்லாத நாடுகளுக்கு ரூபிளுக்கு (ரஷ்யாவின் பண அலகு) மட்டுமே எரிவாயு வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார் புடின்.**



ரஷ்யா எரிவாயு வளம் அதிகம் கொண்ட நாடு. உலக நாடுகளின் எரிவாயுத் தேவையில் பெருமளவானவை ரஷ்யாவைச் சார்ந்துதான் இருக்கின்றன.

இவ்வாறிருக்கையில் உக்ரைனுடனான மோதலை அடுத்து ஐரோப்பிய நாடுகள் பலவும் அமெரிக்காவும் ரஷ்யாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்ததுடன் ரஷ்ய வங்கிகளுக்கும் தடைவிதித்துள்ளன.

இதனால் ரஷ்யாவின் பொருளாதாரத்துடன் ரஷ்யப் பணப் பரிவர்த்தனையும் முடங்கும் அபாய நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே ரஷ்யாவுடன் நட்புறவைப் பேணாத நாடுகளுக்கு எரிவாயு வழங்கவேண்டுமாயின் ரூபிளிலேயே செலுத்தவேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார் புடின்.

புடினின் இந்த உத்தரவையடுத்து டொலருக்குப் பதிலாக ரூபிளை ஈட்ட வேண்டிய தேவை உலக நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் விரும்பியோ விரும்பாமலோ ரஷ்யா மீதான தடைகளைத் தளர்த்த வேண்டிய அல்லது நீக்கவேண்டிய நிலைக்கு சர்வதேச சமூகம் தள்ளப்படும் என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம)



# காதலியை சிறையில் கரம்பிடித்தார் அசாஞ்சே

வொஷிங்டன், மார்ச் 25

விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே தனது நீண்டகால காதலியான ஸ்டெல்லா மோரிஸை தென்கிழக்கு லண்டனிலுள்ள உயர்பாதுகாப்பு சிறைச்சாலையில் நேற்று முன்தினம் திருமணம் செய்துகொண்டார்.

2015ஆம் ஆண்டு முதல் காதலித்து வந்த இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். இந்த நிலையில் தன்னைவிட 13 வயது குறைவான தனது காதலியை அசாஞ்சே நேற்று முன்தினம் சிறையில் திருமணம் செய்துள்ளார்.

ஜூலியன் அசாஞ்சே தனது விக்கிலீக்ஸ் நிறுவனத்தின் மூலம் அரச ரகசியங்களை ஹக் செய்தது தொடர்பான வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டு 2019 ஆம் ஆண்டு முதல் சிறையிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## ஆப்கானிஸ்தானில்

# மேல்நிலைக் கல்விக்கு மாணவிகளுக்குத் தடை

ஆப்கான், மார்ச் 25

ஆப்கானிஸ்தானில் 6ஆம் தரத்துக்கு மேல் கல்வி கற்பதற்கு மாணவிகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றிய நிலையில் அங்குள்ள மக்களுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

இந்த நிலையில் 6ஆம் தரத்துக்கு மேல் கல்வி கற்பதற்கு மாணவிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என தலிபான் ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து அங்கு முதல் தடவையாக மீண்டும் திறக்கப்பட்ட அனைத்து பெண்கள் உயர்நிலைப் பாடசாலைகளும் மூடப்பட்டு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ஹிலாரிக்கு கொரோனா

வொஷிங்டன், மார்ச் 25

அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டனுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றின் லேசான அறிகுறிகள் தென்பட்ட நிலையில் பரிசோதனை மேற்கொண்டபோது அவருக்குத் தொற்றுப் பாதிப்பு உறுதியாகியுள்ளது.

இதுகுறித்து ஹிலாரி கிளின்டன் தெரிவிக்கையில், "கடுமையான நோய்க்கு எதிராக தடுப்பூசிகள் வழங்கும் பாதுகாப்புக்கு முன் எப்போதையையும்விட நன்றியுள்ளவளாக இருக்கிறேன். அத்துடன் நான் நலம்" எனத் தெரிவித்துள்ளார். (ச-இ)

# சீன விமானம் விபத்து: கறுப்புப்பெட்டி மீட்பு

பிஜிங், மார்ச் 25

சீனாவின் விபத்துக்குள்ளான ஈஸ்டர்ன் எயார் லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானத்தின் கறுப்புப் பெட்டி மீட்புப் பணியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனை சீனா விமானத்துறை நிர்வாக அதிகாரி மாவோ யான்ஃபெங் தெரிவித்துள்ளார்.

123 பயணிகள் மற்றும் 9 ஊழியர்கள் உட்பட 132 பேர் இந்த விமானத்தில் பயணம் செய்தனர்.

குவாங்சி மாகாணத்தில் உள்ள மலைப்பகுதி மேல் கடந்த திங்கட்கிழமை 31 ஆயிரம் அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக விமானம் கீழே வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது. இதனால் அப்பகுதியில் தீ பரவியது. விபத்தில் எவரும் உயிருடன் மீட்கப்படவில்லை.

இந்த நிலையில் விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்புப் பெட்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள கறுப்புப் பெட்டி கடுமையாகச் சேதமடைந்துள்ளதால் தரவுகள் தெளிவாக இல்லை எனவும் முக்கிய ஆதாரங்களைச் சேகரிப்பது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் ஆளுமை உருவாக்க களங்கள்

பழனித்துரை தர்மகுமாரன்
ஆசிரியர்
உடுவில் மகளிர் கல்லூரி



ஒரு இனம் அல்லது சமூகம் தன்னை அடையாளப்படுத்த வேண்டுமெனில் இளம் தலைமுறையினரை ஆளுமைமிக்கவர்களாக உருவாக்கவேண்டும். இதற்கு சிறந்த களமாக இருக்க வேண்டியது பாடசாலைகளே. ஆனால், இன்று பாடசாலைகள் பரீட்சையை நோக்கியே நகர்த்தப்படுகின்றனவே தவிர மாணவர்களின் ஏனைய ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கான களமாகத் திறக்கப்படவில்லை.

குடும்பத்துக்கு அடுத்தபடியாக பிள்ளைகள் அதிக நேரத்தை செலவு செய்யும் இடம் பாடசாலை. இங்கு கல்வி அறிவுடன் ஆளுமைகளும் வளர்க்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இல்லையேல் எதிர்காலத்தில் ஆரோக்கியமற்ற பலவீனமான சமூக அமைப்பை நாமே உருவாக்குகின்ற அவச்சொல்லுக்குத் தள்ளப்படுவோம். எந்தக் குழந்தையும் கருவறையிலிருந்து வெளிவரும்போது திறன்களுடனோ, ஆற்றலுடனோ பிறப்பதில்லை. அதற்கு அடித்தளமிடுவது குடும்பச் சூழலும் சமூகச் சூழலும் பாடசாலைச் சூழலுமே ஆகும்.

### பல்திறமை உடையவராக மிளிரவேண்டும் ஆசிரியர்

இங்கு முக்கியமாக ஆளுமைகளை மாணவர்கள் மத்தியில் தூண்டி விடுவதும் துலங்கச்செய்வதும் பாடசாலைகளே. இதனால் பாடசாலையில் இருக்கும் ஆசிரியர்கள் பல்வகை ஆற்றல் கொண்டவராக மிளிர வேண்டும். கியூபா நாட்டில் கடந்த வருடம் நடைபெற்ற ஆசிரிய மாநாட்டுக்குச் சென்ற சில ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள் அங்குள்ள ஆரம்பப் பிரிவு பாடசாலை ஆசிரியர்களின் ஆற்றல்களைக் கண்டு வியந்ததாகத் தெரிவித்தனர். அதாவது பல்தேர்ச்சி ஆற்றல்களையும் ஒவ்வொரு ஆசிரியரும் வெளிப்படுத்தியதாக பாடல், ஆடல், அபிநயக்கதை சொல்லல், நடிப்பு, பேச்சு, மொழியாற்றல், கவர்ச்சி என மாணவர்களை வகுப்பறையிலேயே ஆளுமையை உருவாக்கக்கூடிய செயலாற்றல்மிக்கவர்களாக அந்த ஆசிரியர்கள் காணப்பட்டார்கள்.

ஆனால், எமது சமூகத்தில் தனித்திறமைகள் கொண்டவர்களே அதிகமாகவுள்ளனர். எனவே மாணவர்களின் ஆற்றல்கள் வளர்க்கப்படவேண்டுமானால் பாடசாலைகள் ஆளுமைமிக்கதாகக் கட்டியெழுப்பப்படவேண்டும். ஒவ்வொரு மாணவர்களிடமும் ஏதோவொரு சிறப்பு வெளிப்படும். அதனை அபரிமிதமாக மாற்றுவது ஆசிரியரின் கடமையாகும். இதற்குப் பாடசாலை நிர்வாகம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இருந்தபோதும் கொரோனாத் தாக்கத்தின் பின்னர் பாடசாலை நடைமுறைகளில் இறுக்கமான நிலைமைகளே தோன்றியுள்ளது. பாடப்பரப்பைப் பூர்த்தி செய்தல், பரீட்சைக்குத் தயார்ப்படுத்தல் என்ற நோக்கிலேயே அவை இயங்குகின்றன. இதனால் மாணவர்களும் உளநெருக்கீட்டுக்கு உள்ளாவதுடன் அந்தந்த வயதில் அவர் களால் வெளிப்படுத்தப்படவேண்டிய ஆற்றல்களும் மழுங்கடிக்கப்படுகின்றன.

> மாணவர்களின் ஆற்றல்மூலம் பெறப்படும் அல்லது வளர்க்கப்படும் ஆளுமையையே எதிர்காலத்தில் இனத்தின் அடையாளத்தைப் பாதுகாக்கவும் பறைசாற்றவும் உதவும்.

### மதிப்பெண்கள் மட்டுமே கல்வியாக அமையாது

ஒவ்வொரு மாணவர்களினதும் கல்வி அறிவு எவ்வாறு ஊட்டப்படுகின்றதோ அதேபோல சுயகௌரவத்தை வளர்க்கக் கூடிய களங்களை அமைத்துக்கொடுத்து ஊக்கமளிக்க வேண்டும். நாம் இன்று மதிப்பெண்ணை வைத்தே மனிதஅறிவை அளக்கிறோம். அது ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது என்பதற்கு அமைய சமூக வளர்ச்சிக்கோ, சமூக சவால்களை வெற்றிகொள்ளவோ, ஆளுமைமிக்கவர்களை உருவாக்கவோ உறுதிமிக்கதன்று. ஏனெனில் எவ்வளவுதான் அறிவு வளர்ச்சி ஏற்படுத்தப்பட்டாலும் ஆளுமை இல்லாத அவர்களால் எதனையும் சிறப்பாக செய்யவோ, நிகழ்த்தவோ முடியாது. இதனால்தான் கல்வி அமைச்சே பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுடன் இணைப்பாட விதான செயற்பாடுகளையம் கட்டாயப்படுத்தியுள்ளது. இதனை சில பாடசாலைகள் சிறப்பாக முன்னெடுக்க, பல பாடசாலைகள் கடமையின் நிர்ப்பந்தத்தில் மேற்கொள்வதால் மாணவர்களின் ஆளுமை அந்தரத்தில் தொங்குகின்றது.



மாணவர்களின் ஆற்றல்மூலம் பெறப்படும் அல்லது வளர்க்கப்படும் ஆளுமையே எதிர்காலத்தில் இனத்தின் அடையாளத்தைப் பாதுகாக்கவும் பறைசாற்றவும் உதவும். இதனை எமது முன்னைய ஆசிரியர்கள் சிறப்பாக செய்தனர் என்பது கண்கூடே. எனவே இன்று பாடசாலைகள் முன்னெடுக்கவேண்டிய காலத்தின் தேவை கருதிய சேவை யாதெனில் பாடசாலைகளில் கழகங்களை நிறுவி தலைமைத்துவத்தை வளர்த்தல், முத்தமிழ் விழாக்கள், ஆங்கிலதின விழாக்கள், சிறுவர் ஆற்றுகைகள் புத்தாக்கப் போட்டிகள், ஆன்மிக நிகழ்வுகள், யோகாசனம், விளையாட்டுக்கள் போன்றவற்றை முன்னெடுத்தல் என்பனவே. இதற்கு விருப்பம், முயற்சி என்பன மாணவர்களிடம் இருக்கும்போதும் பெற்றோரின் கல்வி என்ற கோட்பாட்டினாலும், சில ஆசிரியர்களின் சுயநல செயற்பாடுகளினாலும் ஆற்றல்கள் மழுங்கடிக்கப்பட்டு ஆளுமை சிதைக்கப்படுகின்றது. இதனால் அவர்களது திறமைகள், ஆற்றல்கள் இலைமறைகாய்போலவே காணப்படுவதுடன் எமது சமூகத்துக்குக் கிடைக்கவேண்டிய துறைசார்ந்த வர்களும் கிடைக்காமல் செய்யப்படுகின்றார்கள் என்பதே உண்மை.

அறிவு என்பதை புத்தகக்கல்வியால் மட்டும் பெற்றுவிட முடியாது. நூல்களைப் படிப்பதனாலும் பட்டங்களைப் பெறுவதனாலும் வருவதுதான் அறிவு எனத் தீர்மானிக்க முடியாது. எனவே பல்துறைகளில் மாணவர்களை வளர்த்து ஆளுமைமிக்கவராக உருவாக்கப் பாடசாலை சிறப்புற செயலாற்ற முனையவேண்டும்.





கிளிநொச்சி நீர்வழங்கல் சபையால் சர்வதேச தண்ணீர் தினத்தை முன்னிட்டு குருதிக்கொடை நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடபிராந்திய ஊழியர் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட அலுவலகங்களின் ஊழியர்கள் கலந்துகொண்டனர். (ச-214)



யாழ். பூமணி அம்மா அறக்கட்டளை அமைப்பின் ஏற்பாட்டில் வடமராகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழ் செயற்படும் யாழ்ப்பாண மாவட்ட சித்த மருத்துவமனையின் நடமாடும் இலவச மருத்துவ முகாம் கல்லுண்டாயில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கச்சார்பாகச் செயற்படும் வடக்குக் கல்வி அதிகாரிகள்!

## ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு



**யாழ்ப்பாணம், மார்ச் 25**

**வடக்கு மாகாண கல்வி அதிகாரிகள் பக்கச்சார்பாகச் செயற்படுவதால், வெளிமாவட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் பாதிக்கப்படுவதை ஏற்க முடியாது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

வடமாகாணக் கல்வி அமைச்சில் ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பான கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வடமாகாண கல்விப் பணிப்பாளரின் பொறுப்பற்ற, திட்டமிடப்படாத, பக்கச்சார்பான இடமாற்ற நடைமுறைகளால் பல சிக்கல்கள் எழுந்துள்ளன.

இடமாற்ற நடைமுறைகளுக்கு வெளிமாவட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர்களை மட்டும் பலிக்கடாவாக்கும் செயற்பாடுகளுக்கு அனுமதிக்கப் போவதில்லை. தொடர்ச்சியாக, இடமாற்ற சபை தீர்மானங்களை மீறி, இடமாற்ற சபையின் அனுமதியின்றி, பதிலீட்டு இடமாற்றம் வழங்கப்பட்ட பல ஆசிரியர்களுக்கு பல வருட காலங்களாக இடமாற்றங்களை ஒத்தி வைத்துள்ளனர்.

ஒரே வருடத்தில் வழங்கப்பட்ட பதிலீட்டு இடமாற்றங்களின்போது, ஒரு பகுதியினருக்கு மீளவரும் திகதி குறிப்பிட்டும், இன்னொரு பகுதியினருக்கு திகதி குறிப்பிடாமல் பாரபட்சமான முறையிலும் இடமாற்றங்களை செயற்படுத்தியுள்ளனர்.

ஒரே பகுதி இடமாற்றங்களுக்கு வெவ்வேறு நிபந்தனைகள் மூலம் பாரபட்சங்கள் நடைபெற்று வருகின்றன.

கொரோனா நெருக்கடியில், இடமாற்ற சபையின் அனுமதி பெறப்படாமல் ஒரு சிலருக்கு வெளி மாவட்டங்களில் இருந்து சொந்த மாவட்டத்துக்கு முறையற்ற வகையில் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மருத்துவக் காரணங்களுக்காகவும், குடும்ப நெருக்கடிகளுக்காகவும் தமது சொந்த வலயங்களுக்கு தற்காலிக இணைப்புக் கோரி நிற்கும் வெளிமாவட்ட ஆசிரியர்களுக்குக் கூட, பல இழுத்தடிப்புகளை வடமாகாண கல்விப் பணிப்பாளர் செய்து வருகின்றார். யாழ். மாவட்டத்தில் இருந்து, வெளிமாவட்ட சேவை எதனையும் செய்திராத பலரை தொடர்ச்சியாகப் பாதுகாத்து பக்கச்சார்பான இடமாற்ற நடைமுறைகளையே கடைப் பிடித்து வருகின்றார்.

எனவே ஆசிரியர் இடமாற்றங்கள் தொடர்பாக வடமாகாண கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட பாரபட்சமான தீர்மானங்களுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்புத் தெரிவிக்கும் -என்றார். (ம-4-20)



# உணவுத் தட்டுப்பாடு வருவதற்கு வாய்ப்பில்லை

## மஹிந்தானந்த தெரிவிப்பு

கொழும்பு மார்ச் 25

நாட்டில் உணவுப் பாதுகாப்புக்கு எந்த வித அச்சுறுத்தலும் இல்லை. எனவே உணவுத் தட்டுப்பாடு ஏற்படாது என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது;

'நாட்டில் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு பிரச்சினை உள்ளது என்பதை நாம் ஏற்கின்றோம். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற விடயத்தை ஏற்கமுடியாது. உரிய விளைச்சல் கிடைக்கின்றது. எனவே, அரிசி மற்றும் மரக்கறிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது. ஆனால் நாட்டில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட வேண்டும் என்பதையே எதிரணி விரும்புகின்றது. இந்தப்பிரச்சினைகள் விரைவில் தீரும்' -என்றார். (ய-44)

# 7 பில்லியன் ரூபா பெறுமதியான ஹெராக்கெய்ன் கொழும்பில் மீட்பு

20 அடி நீளமான 4 கொள்கலன்களில் 7 பில்லியன் ரூபா பெறுமதியான ஹெராக்கெய்ன் போதைப்பொருள் கொழும்பு சுங்கப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொள்கலன்கள் தென்னமெரிக்காவிலுள்ள பனாமாவிலிருந்து பெல்ஜியம் மற்றும் சவூதி அரேபியா வழியாக இலங்கைக்குக் கடத்தப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு மீள் ஏற்றுமதிக்குத் தயாராக வைக்கப்பட்ட நிலையிலேயே அது மீட்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் அதிக அளவிலான ஹெராக்கெய்ன் போதைப்பொருள் மீட்பு இது எனவும் சர்வதேச போதைப்பொருள் வலையமைப்பொன்றால் இது கடத்தப்பட்டிருக்கலாம் என்றும் சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் டீ.ஜீ.சுதத்த சில்வா தெரிவித்துள்ளார். (ச-ரி1)

# கண்காட்சியும் விற்பனையும்

ஜீவநதி பதிப்பக ஏற்பாட்டில் ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நாளை மற்றும் நாளை மறுதினம் காலை 8.30 மணிமுதல் மாலை 6 மணிவரை நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அத்துடன் கண்காட்சியில் எட்டு நூல்களும் வெளியிடப்படவுள்ளன. எட்டுப் பதிப்பகங்களின் ஆயிரத்துக்கும் மேற்பட்ட எழுத்தாளர்களின் படைப்புக்களோடு அமைந்த புத்தகங்கள் 20 வீதக் கழிவுடன் வழங்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-14)

# மாணவர்களின் கலைவிழா

வவுனியா, மார்ச் 25

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க பாலர் பாடசாலை மாணவர்களின் 27ஆவது கலைவிழா நாளை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் மருத்துவர் ப.சத்தியநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக, வவுனியா வலயக்கல்விப் பணிப்பாளர் அன்னமலர் சுரேந்திரன் கலந்துகொள்வார்.

அத்துடன் நிகழ்வுக்கு ஆட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-14-110)

# பயிற்சியை நிறைவுசெய்த 28 பேருக்கு சான்றிதழ்கள்




கிளிநொச்சி, மார்ச் 25

உயிர்ப்பாதுகாப்புப் பயிற்சியை நிறைவு செய்த 28 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு, கிளிநொச்சி வடமாகாண விளையாட்டுக் கட்டடத்தொகுதியின் நீச்சல் தடாக பார்வையாளர் அரங்கில் நேற்று நடைபெற்றது.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு இலங்கை உயிர்பாதுகாப்புச் சங்கம், தேசிய இளைஞர் படையணியுடன் இணைந்து வடமாகாணத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 28 இளைஞர்களுக்கான நீர் சார்ந்த உயிர்ப்பாதுகாப்புப் பயிற்சிநெறி, கிளிநொச்சி வடமாகாண விளையாட்டுக் கட்டடத் தொகுதியின் நீச்சல் தடாக வளாகத்தில் கடந்த 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சியை நிறைவு செய்த 28 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் சான்றிதழ்களை வழங்கினார். (ம-14-113)

# பாலர் பாடசாலை விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 25

லிற்றில் மாஸ்ரேஸ் மொண்டிசூரி பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலையின் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கி.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் பிரதம விருந்தினராக இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை யாழ்ப்பாண உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் கலந்துகொள்வார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29 மில்லியன் டொலருக்கு

# இலங்கையின் வான்வெளி இந்தியாவுக்கு விற்பனை!

**கொழும்பு, மார்ச் 25**

**இலங்கையின் வான்வெளி 29 மில்லியன் டொலருக்கு இந்தியாவுக்கு விற்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

ஹறப்புத்தளையில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற் குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித் ததாவது:
இலங்கையில் இன்று மக்கள் பெரும் துன் பங்களை அனுபவித்து வருகின்றனர். மக்கள் வீதிகளில் செத்து மடி கின்றனர்.
இந்த நிலையில் இலங் கையின் பாதுகாப்பு எனக்கூறி இலங்கை யின் வான்வெளி இந்தி யாவுக்கு விற்பனை செய் யப்பட்டுள்ளது.
அமைச்சரவையில் ஏழெட்டுத் தீர்மானங் கள் அனுமதிக்கப் பட்டுள்ளன.
இலங்கைப் பெருங்கடல் மற்றும் நிலம் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.
துறைமுகம் அமெரிக் காவுக்கு வழங்கப்பட் டுள்ளது. வான்வெளி இந்தியாவுக்கு வழங்கப் பட்டுள்ளது - என்றார்.
(ம)



## 2025 இல் அனைவருக்கும் சுத்தமான குடிதண்ணீர்

### பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 25
2025 ஆம் ஆண்டில், நாட்டின் அனைத்து மக் களுக்கும் சுத்தமான குடிதண்ணீர்க் குழாய் வசதிகளை வழங்கு வதே அரசின் நோக்கம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
உலக நீர் தின நிகழ்வு அலரி மாளிகையில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.
அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
இலங்கையின் விசால மான கடல்நீரை மறுசு ழற்சி செய்யும் திட்டம், யாழ்ப்பாணக் குடா நாட்டைமையப்படுத்திய வகையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.
அதற்குச் செலவு அதி கமானாலும், வட மாகாண மக்களின் தாகத்தைத் தீர்ப்பதற்கு செய்ய வேண்டியதொன் றாகும் -என்றார்.
நிகழ்வில் களுத்துறை மாவட்ட மக்கள் இது வரை எதிர்நோக்கிய, குடிதண்ணீரில் கடல் நீர் கலக்கும் பிரச்சி னைக்குத் தீர்வு காணும் வகையில், நீர் வழங்கல் திட்டம் ஜனாதிபதியால் இணையம் ஊடாக, மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது.
ஆயிரம் கிராமங்களுக் குப் பாதுகாப்பான குடி தண்ணீரை வழங்கு வதற்கான சமூக நீர் வழங்கல் திணைக்களத் தின் திட்டங்களை வெற் றிகரமாக நிறைவு செய் தமை தொடர்பான மனு. இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவால் ஜனாதிபதியிடம் கைய ளிக்கப்பட்டது.
நிகழ்வில் சமூக ஊட கங்கள் ஊடாக நுகர் வோருக்கு சேவைகளை வழங்கும் தெற்காசியா வின் முதலாவது பயன் பாட்டு நிறுவனமாக டிஜிற்றல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்.
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப் புச் சபையின் சிறந்த முகாமையாளர், சிறப் பாகச் செயற்படும் உத்தி யோகத்தர் அலுவலகம் மற்றும் சிறந்த சமூக நீர் சங்கம் என்பவற்றுக் கான "ஜனாதிபதி விரு துகள்" வழங்கப்பட்டன.
(ஒ-4-இ)

# இந்திய உதவி தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்துக

### அரசாங்கத்துக்கு ரணில் அறிவுரை

கொழும்பு, மார்ச் 25
'நெருக்கடியான சூழ்நி லையில் இந்தியாவிடம் இருந்து கடன் உதவி கிடைக்கப்பெற்றமை இலங்கைக்குக் கிடைத்த அதிர்ஷ்டமாகும்.
எனவே, இது தொடர் பில் நாட்டு மக்களுக்கு உரிய வகையில் அர சாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்' என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலை வரும், முன்னாள் பிரதம ருமான ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை கருத்து வெளி யிட்ட அவர் இது தொடர் பில் மேலும் தெரிவித்த தாவது:
'நெருக்கடியான சூழ்நி லையில் இந்தியாவிட மிருந்து கடன் உதவி கிடைக்கப்பெற்றுள்ளது. முதல் முறையாகவே இவ்வாறானதொரு உதவி கிடைத்துள்ளது. இருந்தும் இது தொடர் பில் பொறுப்பற்ற விதத் தில் தவறான பிரசாரம் முன்னெடுக்கப்பட்டுவரு கின்றது. எனவே, வெளி விவகார அமைச்சர் அல்லது நிதி அமைச்சர் உண்மை நிலைமையை நாட்டுக்குத் தெளிவு படுத்த வேண்டும். அத் துடன், நெருக்கடியான சூழ்நிலையில் இலங் கைக்கு ஒத்துழைப்பு வழங்கிய பங்களாதே ஷுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின் றேன் -என்றார்.
தொடர்ந்து உரையாற் றிய ரணில், சர்வ தேச நாணய நிதியம் இலங்கை தொடர் பில் முன்வைத்துள்ள அறிக்கை இன்னும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. இது சிறப்புரிமை மீறல் பிரச்சினையாகும் என வும் சுட்டிக்காட்டினார்.
இதற்கு பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர் செயான் சேமசிங்க, 'சர் வதேச நாணய நிதியத் தின் அறிக்கை எமக்கு இன்னும் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப் பட்வில்லை. அவ்வாறு கையளிக்கப்பட்டதும், அது சபையில் முன் வைக்கப்படும்' -என் றார்.
(ம-44)

## விசேட தேவையுடைய 8 மாணவர்கள் சித்தி

சாவகச்சேரி, மார்ச் 25
கைதடி நவீல்ட் பாட சாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட் சைக்குத் தோற்றிய, விசேட தேவையுடைய 8 மாணவர்களும் பரீட்சையில் 70 புள் ளிகளுக்கு மேல் பெற் றுள்ளனர்.
பாடசாலையில் கற் கும் 8 மாணவர் கள் புலமைப் பரி சில் பரீட்சைக்குத் தோற்றினர். அவர் கள் எட்டுப் பேரும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளதால் புலமைப் பரிசில் நிதி பெறத் தகைமை பெற் றுள்ளனர் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.
(ஒ-4-9)

# நீர்த்தேக்கங்களில் குறையும் நீர் மட்டம்

### மின் உற்பத்தி பாதிப்பு

கொழும்பு, மார்ச் 25
இலங்கை மின்சார சபை நீர்மின் நிலையங் களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களின் நீர் குறைந்த மட்டத்தை எட்டி யுள்ளது. இதனால் நீர் மின் உற்பத்தி மேலும் தடைப்படும் என்று மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள் ளது.
கடும் வறட்சியான கால நிலை காரணமாக, நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வேகமாக வீழ்ச்சி யடைந்து வருகின்றது.
அதேவேளை தற்போ தைய நிலைவரத்தைக் கருத்திற் கொண்டு மின் கட்டணத்தை உயர்த்து வது குறித்து ஆராயப் படுகின்றது. 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி யில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை என்று பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
(ஒ-4-இ)

## நிராகரிக்கப்பட்ட

# சீன நிறுவனத்திடமிருந்து மீண்டும் பசளை இறக்குமதி

உயிராபத்தை ஏற்படுத்தும் இரசாயனங்கள் கலக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்து நிராகரிக்கப்பட்ட சீன சேத னைப்பசளை நிறுவனத் திடமிருந்து இன்னும் 26 நாள்களுக்குள் பசளை இறக்குமதி செய்யப்படும் என்று இராஜாங்க அமைச் சர் சுஷீந்திர ராஜபக்ச தெரி வித்தார்.
சீன நிறுவனத்தின் முன்மொ ழிவின் பிரகாரம், சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆய்வு கூடத்தில் பசளை பரீட்சிக்கப் பட்ட பின்னர், உள்ளூரிலும் ஆய்வு மேற்கொள்ளப்படும்.
மண் அல்லது வானிலை காரணமாக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சேதனைப் பசளையைப் பயன்படுத்த முடியாமல் போனால் இறக்குமதி செய்யப்பட்ட பசளை பயன்படுத்தப்படும்.
சிறுபோகத்துக்கு அவசிய மான பசளை படிப்படியாகப் பரிசோதிக்கப்பட்ட பின்னரே, விவசாயிகளுக்கு வழங்கப் படும் என்றும் அவர் தெரி வித்துள்ளார்.
(ஒ-4-ரி1)

## சர்வதேச நாணய விவகாரம் சட்ட நிறுவனங்கள் அனுகல்

கொழும்பு, மார்ச் 25
சர்வதேச நாணய நிதியத்துடனான பேச் சுக்கு முன்னர், கடன் மறுசீரமைப்பு தொடர்பாக, சர்வதேச சட்ட நிபுணர்களின் ஆலோசனை கோரும் விடயத்தில், ஆரம்ப விசாரணைகளுக்காக சில சட்ட நிறுவனங் களை அணுகியுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.
சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவதற்காக, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச . அடுத்த மாதம் வொஷிங்டனுக்கு செல்லவுள்ளார்.
இந்த நிலையில், கடன் மறுசீரமைப்புத் தொடர்பான தொழில்நுட்ப உதவிகளுக் காக, சர்வதேச சட்ட நிபுணர்களின் குழுவை நியமிக்க இலங்கை எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
(ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் பதாகை பெறுமதியைக்கூட தமிழரின் உயிர்களுக்கு வழங்கவில்லை

## வாக்குமூலத்தின் பின் தி.நிரோஷ் சாடல்

**கொழும்பு, மார்ச் 25**

**வரவேற்பு பதாகைகளுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம்கூட தமிழர் உயிர்களுக்கு நாட்டில் கொடுக்கப்படவில்லை என்பதையே இன்றைய சம்பவம் வெளிப்படுத்துகின்றது என்று வலி. கிழக்குப் பிரதேசசபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.**

பிரதமர் மஹிந்த ராஜபக்ச யாழ்ப்பாணம் வந்தபோது, ஆள்களைத் திரட்டி வந்து பிரதமரை வரவேற்பதற்கான பதாகைகளை எரித்தார்கள் என கிடைக்கப்பெற்ற முறைப்பாடு ஒன்றின் பிரகாரம் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் சாவகச்சேரி பிரதேசசபை உப தவிசாளர் செல்வரட்ணம் மயூரன் ஆகியோரிடம் நேற்று வியாழக்கிழமை பொலிஸ் வாக்குமூலம் பெறப்பட்டது.

பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கிய பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே தவிசாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முறைப்பாடு ஒன்றின் பிரகாரம் நாம் மட்டுவில் பகுதியில் ஆள்களைக் கூட்டிவந்து பிரதமரின் வரவேற்பு பதாகைகளை எரியூட்டியதாக எம்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. இது தொடர்பில் எம்மிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. நாம் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்களுக்கு நீதி வேண்டி ஜனநாயக வழியில் அந்தப்பகுதியில் போராடினோம் என்றும் யாரால் எரிக்கப்பட்டது என்பது தெரியாது எனவும், போராட்டம் ஜனநாயக வழியிலேயே இடம்பெற்றது என்பதையும் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படமுடியாதது என்பதையும் வலியுறுத்தியுள்ளோம்.

ராஜபக்சக்களின் ஆட்சியிலேயே ஆயிரக்கணக்கானவர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டனர். அதற்கு நீதி கேட்டுப் போராடியவர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டமை யாவரும் அறிந்ததாகும். தாய்மார் தாக்கப்பட்டது தொடர்பாக இந்த நாட்டில் விசாரணை இல்லை. ஆனால், வீதிகளில் தூக்கப்பட்ட பதாகைகளை யார் எரித்தார்கள் என நாட்டில் பெரும் விசாரணைகள் நடைபெறுகின்றன. இதுதான் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் குறித்த நிலை. தாய்மார் தாக்கப்படும்போது நிகழ்வில் பேசிய பிரதமர் வடக்கிலுள்ளவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தனக்குள்ளது என பொய்யுரைத்தார்.

தமிழர் உயிர்களைக் காட்டிலும் கட்டவுட்களுக்கு இலங்கையில் பாதுகாப்புள்ளது என்பதை தாய்மார் தாக்கப்பட்டதை கணக்கில் ஏனும் எடுக்காது பிரதமரின் பதாகை எரிக்கப்பட்டமை தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கும் அரச அதிகாரத்தில் இருந்து புரிந்து கொள்ள முடிகின்றது - என்றார்.

(எ- 26)

# இன்றும் மின்வெட்டு நடைமுறை

கொழும்பு, மார்ச் 25

இலங்கை மின்சாரசபை முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இன்றும் நாட்டில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

A முதல் L வரையிலான வலயங்களில் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரையிலான காலப்பகுதியில் தலா 3 மணித்தியாலம் 20 நிமிடங்களும், மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரையான காலப்பகுதியில் தலா ஒரு மணித்தியாலம் 40 நிமிடங்களும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

P முதல் W வரையான வலயங்களில் காலை 8.30 முதல் 5.30 வரையான காலப்பகுதியில் 4 மணித்தியாலம் 30 நிமிடங்களும், மாலை 5.30 முதல் இரவு 11 மணிவரையான காலப்பகுதியில் ஒரு மணித்தியாலம் 50 நிமிடங்களும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-இ)

## ரயில் கட்டண...

யாக நடைமுறைக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்படவுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

மலையகம் மற்றும் வடமாகாணத்துக்கான நகரங்களுக்கு இடையிலான மற்றும் விசேட ரயில்களுக்கான கட்டணங்கள் நேற்றுமுன்தினம் அதிகரிக்கப்பட்டன. ரயில் கட்டண அதிகரிப்பு தொடர்பில் கலந்துரையாடல் நடத்திய பின்னர், திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமைக்குள் கட்டண விவரம் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு எவ்வித முன்னறிவித்தலும் இன்றித் திடீரென ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டிருந்தன. நகர்விரைவு கடுகதி, நீண்டதூர சேவைகள் மற்றும் விசேட அதிவிரைவு ரயில்களுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேதா சோமரத்ன தெரிவித்திருந்தார். (எ-இ)

(யாழ். கொழும்பு மார்க்க ரயில் சேவைக்கான முன்னர் அறிவிக்கப்பட்ட புதிய கட்டண விவரம் இது. இதில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம் என்று தெரிகின்றது.)

A/C முதலாம் வகுப்பு ஆசன முற்பதிவு
****************

| | |
|---|---|
| யாழ். - கொழும்பு. | 2000.00 |
| பொல்கஹவெலை | 2000.00 |
| யாழ். - குருநாகல் | 1800.00 |
| யாழ். - அநுராதபுரம். | 1500.00 |
| வவுனியா. | 1500.00 |
| யாழ். - கிளிநொச்சி | 1300.00 |

இரண்டாம் வகுப்பு ஆசன முற்பதிவு
***************

| | |
|---|---|
| யாழ். - கொழும்பு. | 1500.00 |
| பொல்கஹவெலை | 1500.00 |
| யாழ். - குருநாகல் | 1300.00 |
| யாழ். - அநுராதபுரம். | 1000.00 |
| வவுனியா. | 1000.00 |
| யாழ். - கிளிநொச்சி | 800.00 |

மூன்றாம் வகுப்பு ஆசன முற்பதிவு
**************

| | |
|---|---|
| யாழ். - கொழும்பு. | 1200.00 |
| பொல்கஹவெலை | 1200.00 |
| யாழ். - குருநாகல் | 1000.00 |
| யாழ். - அநுராதபுரம். | 700.00 |
| வவுனியா. | 700.00 |
| யாழ். - கிளிநொச்சி | 500.00 |

## விபத்தில் வாகனம் சேதம்

வேகக் கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வாகனம் முன்னால் சென்ற கூலர் வாகனத்தை மோதியதில், கூலர் வாகனம் பலத்த சேதத்துக்கு உள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் சாவகச்சேரி மருத்துவமனைக்கு முன்பாக நடந்துள்ளது.

அதேவேளை, நேற்றுமுன்தினம் இரவு அதே இடத்தில் பட்டாரக வாகனத்தை டிப்பர் வாகனம் ஒன்று மோதியது. அதில் பட்டா வாகனம் பலத்த சேதமடைந்தது. (எ-9)

# எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மிதமிஞ்சிய எரிபொருள் உள்ளதாம்

கொழும்பு, மார்ச் 25

எரிபொருள் நிரப்பு நிலையங்களில், எரிபொருள் மேலதிகமாக உள்ளமையால், சில எரிபொருள் தாங்கி ஊர்திகள் மீளத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன என்று வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மற்றுமொரு கப்பலில் இருந்து, முத்துராஜவளையில் பெற்றோலை தரையிறக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. டீசல் கப்பலொன்று வந்துள்ள நிலையில், அந்த டீசலை கொலன்னாவையில் தரையிறக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இந்தியாவிலிருந்து மற்றுமொரு எரிபொருள் கப்பல் எதிர்வரும் முதலாம் திகதி நாட்டுக்கு வரவுள்ளது.

கொழும்பின் சில பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில், போதுமான அளவு எரிபொருள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளமையால், எரிபொருள் தாங்கிகள் இவ்வாறு மீளத் திரும்பியுள்ளன - என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக பெற்றோலிய களஞ்சியங்கள் முனைய நிறுவனத்தின் முகாமையாளர் கருத்துத் தெரிவித்தபோது, எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் சென்ற சில பெற்றோல் தாங்கிகள், இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டன என்று தெரிவித்தார்.

ஆயினும் பல பிரதேசங்களில் எரிபொருள் இன்மையால், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அத்துடன், பல பாகங்களில், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால், வாகனங்களும், பொதுமக்களும் நீண்ட வரிசைகளில் காத்திருந்ததையும் பார்க்க முடிந்தது - என்றார்.

(எ-இ)

# இலங்கைக்கு வந்த ஐ.எம்.எவ். பிரதானி பதவி விலக முடிவு!

கொழும்பு, மார்ச் 25



அண்மையில் மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வந்திருந்த, சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் தலைவர் சாங்யோங் ரீ அந்தப் பதவியிலிருந்து ஓய்வுபெற தீர்மானித்துள்ளார்.

அனுபவமிக்க பொருளாதார நிபுணரான இவர், தென் கொரியாவின் மத்திய வங்கி ஆளுநராக பெயரிடப்பட்டதையடுத்து, இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நிலைமை தொடர்பான அறிக்கையைப் பெறுவதற்காக இலங்கைக்கு வந்த சாங்யோங் ரீ, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச மற்றும் நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளையும் சந்தித்தார்.

பொருளியல் துறையில் இரண்டு கலாநிதிப் பட்டம் பெற்றுள்ள சாங்யோங் ரீ, இதற்கு முன்னர் கொரிய மத்திய வங்கியின் ஆலோசகராகப் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-இ)

# விபத்தில் ஒருவர் காயம்

கொடிகாமம், மார்ச் 25



அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு சென்ற ஆட்டோவை பின்னால் சென்ற கூலர் வாகனம் மோதியதில் ஆட்டோ சாரதி காயமடைந்தார்.

சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்த விபத்து கடந்த செவ்வாய்க்கிழமை மீசாலை வடக்கு, இராமாவில் பகுதியில் ஏ-9 வீதியில் நடந்துள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(எ-9,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## K.P திருமண சேவை

எம்மிடம் சகல ஜாதி மதத்தினருக்குமான மணமகன், மணமகள் ஜாதகம் உண்டு. **தேவையானோர் தொடர்பு கொள்ளவும்.**

தொடர்புகளுக்கு-

**077 00 50 344**

## வேலையாள் தேவை

கொழும்பில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் குடும்பத்திற்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் வேலையாள் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: **077 3866250**

## வேலையாட்கள் தேவை

கொழும்பு வெள்ளவத்தையில் இயங்கும் பஸ் சேவை மற்றும் பொதிகள் சேவை நிறுவனத்திற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: **077 386 6250**


# சைக்கிள் திருடியமைக்காக யாழ்.நகரில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், மாரச் 25

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் சைக்கிள் திருடிய குற்றச்சாட்டில் நேற்று மதியம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்பபாணம் நகர் பகுதியில் அண்மைக் காலமாக துவிச்சக்கர வண்டி திருட்டு நடந்து வந்த நிலையில் ஒருவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் சைக்கிளைக் கொண்டு செல்வதை சுற்றுக்காவலில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவதானித்துள்ளனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளை அவர் திருடியமை தெரியவந்துள்ளது. கோப்பாய் தெற்கைச் சேர்ந்த 27 வயதான அந்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.(எ-125)


# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 10 . 1933

மறைவு 23 . 03 . 2022



## மனுவேல்பிள்ளை செல்வராசா அந்தோனிப்பிள்ளை

**(பிரபல்ய முறிவு நோவு வைத்தியர்)**

ஒட்டகப்புலத்தை பிறப்பிடமாகவும் இல.85 9/5, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல்ய முறிவு நோவு வைத்தியர் மனுவேல்பிள்ளை செல்வராசா அந்தோனிப்பிள்ளை கடந்த (23.03.2022) புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை வெரோணிக்கம்மா ஆகியோரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சவியேற்பிள்ளை ஞானம்மா ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற அன்னம்மாவின் பாசமிகு கணவரும், மேரி மல்லிகா, லூர்து மேரி சாந்திகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மபாலன், இராசசேகரம் (ஜேர்மனி), பிரசன்னா (சுவிஸ்), காமினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மேரி ஆதித்தியா (மாணவி, இந்து மகளிர் கல்லூரி) வின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான றோசம்மா, மரியம்மா மற்றும் மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மரியாம்பிள்ளை மற்றும் மேரிப்பிள்ளை, மரியதாஸ், மேரி லூட்ஸ், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் வள்ளிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், அன்ரன் பிரான்சிஸ் (முகாமைத்துவ உதவியாளர், யாழ். மாநகர சபை), மேரி அனித்தா (NSB வங்கி ஊழியர் - கிளிநொச்சி) சைலஜா (கிராம அலுவலர் தெல்லிப்பளை பிரதேச செயலகம்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (26.03.2022) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு ஆஸ்பத்திரி வீதி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருப்பலியின் பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 19007) 1/6

# விண்ணக வாழ்வில் 25ஆம் வருட நினைவஞ்சலி

மண்ணில் 02 . 10 . 1930

விண்ணில் 25 . 03 . 1997



## அமரர் திருநாவுக்கரசு திரேசம்மா

'அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள்
ஏனெனில் அவர்களின் செயல்கள் அவர்களைப் பின் தொடரும்'
(தி.வெ.14 : 13)

ஆயிரம் சொந்தங்கள் இருந்தும்
அன்னையே
உன்னைப்போன்று
அன்பு செய்ய
யாரும் இல்லை இவ்வுலகில்
ஆண்டுகள் இருபத்தைந்து ஆன போதிலும்
ஆறவில்லை உங்கள் பிரிவு
உமது பிரிவால் நினைந்துருகும்.

நினைவுகளுடன்
திருமதி சாந்தி ஞானசேகரன்

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 10 . 06 . 1930

இறப்பு 23 . 02 . 2022



## அமரர் திருமதி T. செல்வநாயகி

**(திதி : மாசிமாத தேய்பிறை ஸப்தமி)**

கடந்த 23.02.2022 புதன்கிழமை அதிகாலை சிவபதமடைந்த எமது அன்புத் தாயாரின் பூதவுடல் அன்று காரைக்கால் சிவ இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. தொடர்ந்து வந்த வீட்டுக்கிருத்திய, அந்தியேட்டி நிகழ்வுகளும் உரிய வகையில் நடைபெற்றன. இதன்போது கலந்து கொண்ட கைகொடுத்த, கண்டு - கேட்டு ஆறுதல் கூறிய உற்றார், உறவுகள், நட்புகள் அனைவரது கரங்களையும் இறுகப்பற்றி இதயத்தால் நன்றி கூறுகின்றோம். இன்று (25.03.2022) வெள்ளிக்கிழமை நினைவஞ்சலிப் பிரார்த்தனை சிறுவர் இல்ல மொன்றுடன் பகிர்ந்து கொள்ளப்படும்.

"அம்மா இல்லாத வீடு ஆண்டவன் இல்லாத ஆலயம்"

இணுவில் மேற்கு,
இணுவில்.

குடும்பத்தினர்
மகள்

(CS 43711) (3/6)


# கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலைக்கு தேவையான சத்திரசிகிச்சைநிபுணர்களுக்கான சீருடைகள், வைத்தியர், தாதியருக்கான சீருடைகள் கொள்வனவுக்கான கேள்வி கோரல் 2022

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான ஆர்வமுள்ளவர்களிடம் கீழ் குறிப்பிடப்படும் பொருட்களுக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இல | கேள்விகள் | மதிப்பீட்டுப்பெறுமதி | மீளளிப்பு செய்யப்படாத கட்டணம். |
|---|---|---|---|---|
| 01 | NP/DGH KOC/2022/Gp/01 | Green / Blue Color Surgeon gown for Hospital Use | 2 MN | 500.00 |
| | | Pajama suit | | |

1. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் 28.03.2022 மாலை 2.30 மணிக்கு எமது வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் கலந்து கொண்டு விலை தவிர்ந்த ஏனையவிடயங்கள் (துணிவகை, நிறம், அளவு போன்றவை) தொடர்பாக கலந்துலையாடப்பட்டு அறிக்கை பதிவுசெய்யப்படும்.
2. மேற்படி தைக்கப்பட்ட சீருடைமாதிரிகள் எம்மால் கலந்துரையாடலின் போது தங்களுக்கு காண்பிக்கப்படும். அதற்கேற்ப எமக்கு தயாரித்து வழங்கவேண்டும்.
3. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இவ்வைத்தியசாலை அலுவலகத்தில் கிடைக்க பெறும் விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 28.03.2022 தொடக்கம் 06.04.2022 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
4. கேள்விகள் 06.04.2022 ம் திகதியன்று பிற்பகல் 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு மாவட்ட பொதுவைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.
5. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் மாவட்ட பொதுவைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல 0212285329/0212284111) என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
6. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர் பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**கிளிநொச்சி.**

(IN 17068) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த **18.03.2022** ஆம்
திகதியன்று **மாவட்ட நீதிபதி S.சதீஸ்தரன்**
**முன்னிலையில் அகில இலங்கைச் சமாதான**
**நீதவானாகச் சத்தியப் பிரமாணம்**
செய்து பதவியேற்றுக்கொண்ட

## திருமதி கௌதமி ஜோண் றொசான்

அவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்களையும்
பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**வாழ்த்துவோர்:**

**இரத்தினம் - பவதி குடும்பத்தினர்**
**கந்தையா - சின்னம்மா குடும்பத்தினர்**
**றூபசிங்கம் - கிறிஸ்ரின் குடும்பத்தினர்**

CS 18998(2.6)

---

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## WALK-IN-INTERVIEW
## Establishment of Library of Tamilology

A walk in interview for the post of PROJECT ASSISTANT on contract basis will be held on 30.03.2022 (Wednesday) at 9.30 am at the Board Room of the University.

**Qualifications:**

I. Should have passed the G.C. E. O/L Examination in 06 subjects with three credit passes including in Sinhala/Tamil, English Language / English Literature and Mathematics.

*And*

II. Should have passed the G.C. E. A/L Examination with three credit passes.

**Note:** Work experience in similar projects and knowledge related to Library and Information Science would be considered as an additional qualification.

Age : Applications should be less than 40 years of age

Salary: Gross Salary of LKR 30,000.00 PM. In addition EPF 12% and ETF 3% will be paid

Candidates are required to appear with relevant certificates, NIC and self-prepared applications

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**

**24.03.2022** (IN 17067) (3/6)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் உணவகத்தை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் 08.04.2022 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கோண்டாவில் மாணவர் விடுதி உணவகம் | கோண்டாவில், யாழ்ப்பாணம். |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000/- இனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 970000060000268 இற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/- இனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 970000060000276 இற்கும் தனித்தனியாக மக்கள் வங்கியில் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைகழக நலச் சேவைகள் கிளைக்கு நேரடியாகவோ தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல 021 222 6716) பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**24.03.2022** (IN 17066) (3/6)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வ
23 . 11 . 1962

உதிர்வு
21 . 03 . 2021



## அமரர் திருமதி பிரபாலினி வரதராஜன்

**(ஆசிரியர் – யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை)**

அன்பான குடும்பத் தலைவியாய்
பண்பரன நல் வழிகாட்டியாய்
ஊர் போற்றும் நல் உத்தமியாய்
பேர் கூறும் நல் ஆசானாய்
பாரினில் வாழ்ந்த எங்கள் குலவிளக்கே
என்றும் மறவோம் உம் அன்பு திருமுகத்தை
ஆண்டொன்றென்ன ஆண்டுகள் பல கடந்தாலும்
எம்முள் என்றென்றும் ஆத்மார்த்தமாய் நிறைந்திருப்பீர்கள்
ஆண்டவன் திருவடியில் இளைப்பாற தினமும் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி!**

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

(CR 1848) (3/6)

---

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
18 . 06 . 1938

மறைவு
24 . 02 . 2022



கடந்த **24.02.2022** வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் கனகர் இராசையா [சொக்கர்]

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (25.03.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயனார் கோவிலடி,
சுன்னாகம்.

(CS 43756) (3/6)

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏதிலிகளாக...

கைவிடுவதோடு, அவர்களுக்கு அரணாக நிற்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி விழிபிதுங்கி நிற்கிறது. அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் மதிப்பு 284 ரூபாவாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. அங்கு அத்தியாவசியப் பொருள்களின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான உணவுத் தட்டுப்பாடு, வேலையின்மை காரணமாக யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளைச் சேர்ந்த இலங்கைத் தமிழர்கள் தமிழகத்துக்கு வந்துள்ளனர். அடுத்து வரும் நாள்களில் மேலும், அதிக எண்ணிக்கையில் தமிழகத்துக்கு பலர் அகதிகளாக வருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

தமிழகத்துக்கு அகதிகளாக வரும் இலங்கைத் தமிழர்களுக்கு போதுமான வசதிகளை ஏற்படுத்தித் தர தமிழ்நாடு அரசு முன்வரவேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி கேட்டுக்கொள்கிறது - என்றுள்ளது. (அ-எ-இ)

## அத்துமீறி...

படகொன்றில் தமிழக மீனவர்கள் நால்வர் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது, ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நால்வரும் மயிலிட்டித் துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், அவர்களை நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை- இரணைதீவுக்கு அருகே மீன்பிடியில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் முழங்காவில் கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், அவர்களை கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 4 மீனவர்களும் நேற்று பிற்பகல் ஊர்காவற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, அவர்களை எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (அ-எ-26-20-23)

## வெடிமருந்து...

களைச் சேகரித்து கிறைண்டரால் வெட்டியபோது அது வெடித்து உயிரிழந்திருந்தார். இந்தச் சம்பவம் கடந்த டிசெம்பர் மாதம் நடந்தது.

அந்த இளைஞர், இத்தாவிலைச் சேர்ந்த ஒருவரின் அறிவுறுத்தலின்பேரிலேயே வெடிபொருள்களைச் சேகரித்து, வெட்டி வெடிமருந்தை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டார் என்று கூறப்படுகின்றது. இத்தாவிலைச் சேர்ந்த அந்த நபர், வெடிப்புச் சம்பவத்தின் பின்னர் தலைமறைவாகியிருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், பளைப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்தபோது அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மேலதிக விசாரணைகளுக்காக பயங்கரவாத தடுப்புப் பிரிவு மற்றும் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-எ-113)

## கோத்தா...

நேற்று கண்டி தலதாமாளிகைக்கு சென்று மாகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார உட்பட 11 கட்சிகளின் பிரதிநிதிகள் அரசாங்கத்துக்கு எதிரான கடும் கருத்துக்களை வெளியிட்டனர்.

திமிர்பிடித்த அசிங்கமான - அமெரிக்கரை நிதி அமைச்சராக வைத்துக் கொண்டு இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லமுடியாது. வெகுவிரைவில் அரசின் சாதாரண பெரும்பான்மையும் இல்லாது செய்து, இந்த ஆட்சிக்கு முடிவு கட்டப்படும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ கூளுரைத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வழியை நாம் காட்டினோம். அதன் ஒரு பலனாக எம்மை அமைச்சரவையில் இருந்து நீக்கினர். அதை நாம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டோம். 11 கட்சிகள் இணைந்து தயாரித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும். அது தொடர்பில் மகாநாயக்க தேரர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

சர்வகட்சி மாநாட்டில் நிதி அமைச்சர் முறையற்ற விதத்தில் நடந்துகொண்டுள்ளார். முன்னாள் பிரதமரை மதிப்பற்ற வகையில் விளித்து திமிர்பிடித்தவராக செயற்பட்டார். இப்படியான நிதி அமைச்சருக்கு ஒற்றுமை அல்ல முரண்பாடே தேவைப்படுகின்றது.

இந்த திமிர்பிடித்த - அசிங்கமான - அமெரிக்கரை நிதி அமைச்சராக வைத்துக் கொண்டு நாட்டை முன்னோக்கி அழைத்துச்செல்லமுடியாது. எனவே, கூடிய விரைவில் இந்த அரசின் 113 என்ற சாதாரண பெரும்பான்மையையும் இல்லாது செய்து, அரசுக்கு முடிவு கட்டப்படும் - என்றார்.

2020 ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவானது, கூட்டணி அமைத்து மொட்டு சின்னத்தில் எதிர்கொண்டது. தேசிய ரீதியில் 59.09 சதவீத வாக்குகளைப் பெற்ற அந்தக் கட்சிக்கு 17 போனஸ் ஆசனங்கள் உட்பட 145 ஆசனங்கள் கிடைத்தன. பங்காளிக்கட்சிகளின் ஆதரவுடன், முஸ்லிம் கட்சிகளின் உறுப்பினர்கள், அரவிந்தகுமார், டயானா போன்றவர்களும் அரசாங்கத்துக்கு ஆதரவை வெளிப்படுத்தினர். அதனால் நாடாளுமன்றத்தில் 160 ஆசனங்கள் அரசாங்கத்தின் வசம் இருந்தன. அதாவது மூன்றிலிரண்டு பெரும்பான்மையை (150) விஞ்சிய ஆதரவை ராஜபக்ச அரசாங்கம் பெற்றிருந்தது.

தற்போது விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்பு ஏற்பட்ட அரசியல் சூழ்நிலையால் அரசு விசேட பெரும்பான்மையை இழந்துவிட்டது. சுதந்திரக் கட்சியும் காலைவாரும் நிலையிலேயே உள்ளது. சுசில் பிரேமஜயந்த, விஜயதாச ராஜபக்ச ,சந்திம வீரக்கொடி, விதுர விக்ரமநாயக்க, பிரேமநாத் தொலவத்த ஆகியோருக்கும் அரசுடன் நல்லுறவு இல்லை. சர்வகட்சி மாநாட்டை புறக்கணித்து இ.தொ.காவும் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளது. அதனால் மொட்டு கட்சிக்கு ஆட்சியை தக்கவைத்துக்கொள்வதற்கான சாதாரண பெரும்பான்மை (113 ஆசனங்கள்) ஆதரவு கூட ஊசலாடுகின்றது.

இந்தப் பின்னணியில் அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகளை தீவிரப்படுத்தவுள்ளதாக விமல் மற்றும் உதயகம்மன்பில தரப்பு தெரிவித்துள்ளது. அதனால் வெகுவிரைவில் அரசாங்கத்துக்கு நெருக்கடிகள் ஏற்படலாம் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-எ-44)

## ஆலயத்துக்கு...

நோயாளர்காவு வண்டிவந்த சுகாதார உத்தியோகத்தர்கள் முதியவருக்கு முதலுதவி கொடுக்க முயன்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்தமை கண்டறியப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. உயிரிழந்தவர் அடையாளம் காணப்படாத நிலையில் கோப்பாய் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-125-27)

## வாழ்க்கைச்...

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

டொலர் கட்டுப்பாட்டை இழந்ததன் பின்னர் 300 ரூபாவாக இப்போது அதிகரித்துள்ளது. இதனால் எதிர்வரும் காலங்களில் வாழ்க்கைச் செலவு தவிர்க்க முடியாத அளவுக்கு உயரும். ஜூன் மாதத்துக்குள் டொலர் 400 ரூபாவை எட்டும் என்பதே எனது கணிப்பாகும் - என்றார். (அ-எ-இ)

## 'வற்' வரி...

சட்ட வரைவு நாடாளுமன்றில் நேற்று முன்வைக்கப்பட்டது. பெறுமதிசேர் வரிச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்க நிதி பற்றிய குழு அண்மையில் அனுமதி வழங்கியிருந்தது.

பாதீட்டின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்காகவும், 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரிக் கொள்கை முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தவும் இந்தச் சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 2022 ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிதிச் சேவை வழங்கலுக்கு பெறுமதி சேர் வரியானது 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரிக்கப்படவுள்ளது. ஏதேனும், தொற்றுநோய் சூழல் அல்லது மக்களுக்கான அவசர சூழலின்போது அரசாங்க மருத்துவமனைகள், சுகாதார அமைச்சு ஆகியனவற்றுக்கு வழங்கப்படும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஔடத நன்கொடைகளுக்கு மாத்திரம் பெறுமதி சேர் வரி விலக்களிப்பு செய்யப்படவுள்ளது.

நாட்டில் வரி வசூலிப்பில் அதிகரிப்பு அல்லது குறைப்புச் செய்வதாயின் அது தொடர்பாக பொருளாதார மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது அரசாங்க நிதி பற்றிய குழு உறுப்பினர்களின் நிலைப்பாடாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## போதை செய்த...

உரும்பிராயைச் சேர்ந்த 38 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். மனைவியுடன் முரண்பட்டுக் கொண்டு, இவர் கைதடியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குச் சென்ற அவர், அங்கு வைத்து தீக்குளிக்கப் போவதாக அச்சுறுத்தியுள்ளார். மதுபோதையில் இருந்த அவரை, அங்கிருந்தவர்கள் தடுக்க முயன்றபோது வாக்குவாதப்பட்டுள்ளார். இது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று அந்த நபரைக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-125)

## வீடு...

செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் பட்டப்பகல் வீடு உடைத்துப் பணம், நகை திருடப்பட்டிருந்தது என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருந்தது. முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட புதுக்குடியிருப்புப் பொலிஸார், தர்மபுரம் பொலிஸாரின் உதவியுடன் சந்தேகநபர்களை தர்மபுரம் பிரதேசத்தில் வைத்துக் கைது செய்தனர் என்று கூறப்படுகின்றது. சந்தேகநபர்கள் பயணித்த முச்சக்கர வண்டியும் பொலிஸாரின் பொறுப்பில் எடுக்கப்பட்டது.

தற்போது சந்தேகநபர்கள் புதுக்குடியிருப்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (அ-எ-19-113)

## யாழ். நகரப்...

டுள்ளது.

38 வயதுடைய இளைஞர் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 19ஆம் திகதி வேலைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றார் என்றும், அதன்பின்னர் வீடு திரும்பவில்லை என்றும் குடும்பத்தினர் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டுக்கு அமைய நடவடிக்கை எடுத்த பொலிஸார், யாழ்ப்பாணம் ராஜா திரையரங்குக்கு முன்னுள்ள உணவுக் களஞ்சியத்தில் இளைஞரின் உடலை நேற்றுக் கண்டுபிடித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-எ-27)

## தந்தையின்...

குழந்தை காயமடைந்தது. இந்தச் சம்பவம் நேற்று கிளாலி, எழுதுமட்டுவாழில் நடந்துள்ளது.

காரை வெளியே கொண்டு செல்வதற்காக தந்தை பின்புறமாக நகர்த்திய போது, பின்புறம் நின்றிந்த குழந்தை சக்கரத்துக்குள் சிக்கியது என்று கூறப்படுகின்றது.

காயத்துக்குள்ளான குழந்தை சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளது. (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு, வற்றாப்பளை - நந்திக்கடல் கரையிலுள்ள கண்ணகி மாட்டுவண்டி சவாரித்திடல் திறப்பு விழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சவாரித்திடல் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாட்டுவண்டி சவாரியாளர்களின் மாட்டுவண்டிப் போட்டி நடைபெற்றது. அ, ஆ, இ, ஈ, உ என 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டியில் 72 சோடி மாடுகள் கலந்துகொண்டன. (ச-19)

# ராஜபக்ச அரசை விரட்டும் காலம் நெருங்கி விட்டது!

## அநுர அறைகூவல்



**கொழும்பு, மார்ச் 25**

**தம்மால் முடியாது என்பதை இந்த ஆட்சியாளர்கள் அனைத்து விதத்திலும் நிரூபித்து விட்டதால், ராஜபக்ச ஆட்சியை மக்கள் வீட்டுக்கு அனுப்ப வேண்டிய நேரம் வந்து விட்டது. அதற்கு நாமும் தயார் - இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

தேசிய மக்கள் சக்தியின் மாபெரும் அரச எதிர்ப்புப் பேரணியில் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டு வளங்களைக் கொள்ளையடித்த பஸில், மத்திய வங்கியைக் கொள்ளையடித்த ரணில், தரகுப்பணம் வழங்கிய கப்ரால் உள்ளிட்டவர்கள் சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்றனர். இவர்களுடன் என்ன பேச - கலந்துரையாட முடியும்? நாங்கள் சென்றிருந்தால், 'கோத்தாபயவே வீட்டுக்குச் செல்லுங்கள்' என்பதையே கூறியிருப்போம்.

நிர்வாகக் கட்டமைப்பில் ஊழல், மோசடிகள் தலைவிரித்தாடுகின்றன. கடந்த 70 ஆண்டுகளில் நாட்டைச் சீரழித்துவிட்டனர். முன்னாள், இந்நாள் அமைச்சர்கள் ஊழல்கள் பற்றி கருத்துக்களை வெளியிட்டுக் கொள்கின்றனர். இதுதான் எமது நாட்டு அரசியல். அவர்கள் இவர்களைப் பற்றியும், இவர்கள் அவர்களைப் பற்றியும் குறை கூறுவது வாடிக்கையாகிவிட்டது. எனவே, ராஜபக்ச ஆட்சியை விரட்டியடிப்பது மட்டுமல்ல, புதியதொரு கலாசாரத்தை உருவாக்கும் பொறுப்பும் எமக்கு உள்ளது. மக்கள் சக்தி மூலம் ஆட்சியை விரட்ட முடியும் - என்றார். (ம-4,22)

## புதுக்குடியிருப்பில் எரிபொருள் இல்லை



முல்லைத்தீவு, மார்ச்25

முல்லைத்தீவு மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசலுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றது என்று சாரதிகள் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் கடந்த இரு நாள்களாக மூடப்பட்டுள்ளது. எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக செல்லும் ஊர்திகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-19)

**வீடு வாடகைக்கு**
மானிப்பாய் றோட் ஓட்டுமடம் சந்திக்கு அருகாமையில் 3 படுக்கை அறைகள், 2 பெரிய வரவேற்பறையுடன் வீடு வாடகைக்கு உண்டு.
வாடகை : 25,000
முற்பணம் : 2.5 லட்சம் பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 074 291 9908

**பணிப்பெண் தேவை**
ஒரு வயது குழந்தையை பராமரித்தல் மற்றும் சமையல் வேலைக்கு பணிப்பெண் தேவை.
காலை முதல் மாலை வரை தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது
உரும்பிராய் கிழக்கு, (cr.37703) (2.6)
077 777 0030

**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் புதிதாக திறந்த New Colombo Fashion புடைவைக் கடைக்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை.
நேர்முகத்தேர்வு : 26.03.2022 நடைபெறும்.
தொடர்பு:
074 014 3051, 077 067 6744, 077 838 9099
(CS 43746)1-6

## 35 வருடங்களின் முன்

# திலீபன் தெரிவித்தது இப்போது நடக்கிறது

## விஜித ஹேரத் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 25

பயங்கரவாதத் தடைச்சட்டம் வடக்கில் உள்ளவர்களை மட்டுமல்ல, தெற்கில் உள்ளவர்களையும் ஒடுக்கும் என திலீபன் அன்று கூறியது தற்போதும் நினைவில் நிற்கிறது என ஜே.வி.பியின் மூத்த தலைவர்களில் ஒருவரான விஜித ஹேரத் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் இறுதியில் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் என்பதை தியாக தீபம் திலீபன் அன்றே கணித்திருந்தார். அவர் 1987ஆம் ஆண்டில் தெரிவித்தவை இப்போது நடக்கின்றன - என்றார். (ம)

**வேலையாட்கள் தேவை**
வடமாகாணத்தின் முன்னணி கட்டட ஒப்பந்தகார நிறுவனத்திற்கு கீழேகுறிப்பிட்ட வேலையாட்கள் தேவை.
❖மேசன்
❖மேசன் உதவியாளர்
❖தச்சுத் தொழிலாளர்
தொடர்பு: 077 76 14 441

# இலங்கையை இரையாக்க கழுகுக் கண்கள் இலக்கு

## சஜித் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 25

ஆட்சியாளர்களின் பிடியில் சிக்கியுள்ள இலங்கை இன்று விளையாட்டு மைதானமாக மாறியுள்ளது. இந்த நாட்டை இரையாக ஆக்குவதில் கழுகுக் கண்கள் கவனம் செலுத்தியுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் டி.எஸ். சேனாநாயக்க ஞாபகார்த்த நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒற்றுமையின் மூலமே நாடு வெற்றிபெற முடியும் என்பது சேனநாயக்கவின் ஆளுமையில் தெளிவாகின்றது. அத்தகைய ஒற்றுமையின் மூலமே அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும். இன்று எமது நாடு சக்தி வாய்ந்தவர்களின் விளையாட்டு மைதானமாக மாறியுள்ளது. இதிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கான சவால் நம் அனைவரின் முன்னாலும் உள்ளது - என்றார். (ம-4,இ)

**திருமாங்கல்யம்**
**திருமண சேவை**
எமது திருமண சேவையில் எதிர்வரும்
26, 27, 28 திகதிகளில்
மணமகன், மணமகள் பதிவுகள் இலவசம்
35, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
021 728 4433, 077 120 4651
Email : info@thirumaangalyam.com
website: thirumaangalyam.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.